www.Padasalai.Net www.CBSEtips.in

புதிய பதிப்பு

பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

# தமிழ் அமுது 12

அரசு பொதுத் தேர்வு,
அரசு மாதிரித் தேர்வு
மற்றும்
PTA வினாக்களுக்கான
விடைகள்
இணைக்கப்பட்டுள்ளன



இலக்கு
100/100

இணைப்பு
வினா வங்கி

பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

FOR ORDERS CONTACT : 8925612359

பெங்குயின்

# தமிழ் அமுது

## 12

“புதிய பாடத்திட்டத்தின் படி
தயாரிக்கப்பட்டுள்ளது”

இணைப்பு: வினா வங்கி

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை
ரூ.356/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழாசிரியப் பெருமக்களே!

நாங்கள் 12 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின் படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி,அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்காலவாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சிலவினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு,தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் பகுதியும் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலைநிறுத்துங்கள். அரசுப்பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதி | | | 1 |
| 1 | மொழி | செய்யுள் | இளந்தமிழே! | 7 |
| | உயிரினும் ஓம்பப் படும் | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | 12 |
| | | செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் | 19 |
| | | துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு | 25 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 27 |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுக்சூழல் | உரைநடை | பெருமழைக்காலம் | 37 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 46 |
| | | | நெடுநல்வாடை* | 50 |
| | பெய்யெனப் பெய்யும் மழை | துணைப்பாடம் | முதல்கல் | 57 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 59 |
| 3 | பண்பாடு | உரைநடை | தமிழர் குடும்பமுறை | 72 |
| | சுற்றத்தார் கண்ணே உள | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 78 |
| | | | கம்பராமாயணம்* | 82 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 90 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 93 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 105 |
| 4 | கல்வி | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 114 |
| | செல்வத்துள் எல்லாம் தலை | செய்யுள் | இதில் வெற்றி பெற* | 119 |
| | | | இடையீடு | 123 |
| | | | புறநானூறு* | 125 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 129 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 130 |
| 5 | நாகரிகம், தொழில், வணிகம் | உரைநடை | மதராசப்பட்டினம் | 142 |
| | நாடென்ப நாட்டின் தலை | செய்யுள் | தெய்வமணிமாலை* | 150 |
| | | | தேவாரம் | 156 |
| | | | அகநானூறு | 161 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | 165 |
| | | இலக்கணம் | படிமம் | 169 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359


| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கலை, அழகியல், புதுமைகள் | உரைநடை | திரைமொழி | 179 |
| | **சிறுகைஅளாவிய கூழ்** | செய்யுள் | கவிதைகள் | 187 |
| | | | சிலப்பதிகாரம்* | 189 |
| | | | மெய்ப்பாட்டியல் | 197 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 201 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 204 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 209 |
| 7 | நாடு, அரசு, சமூகம், நிருவாகம் | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 224 |
| | | செய்யுள் | அதிசயமலர் | 229 |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | 232 |
| | **அருமை உடைய செயல்** | | புறநானூறு* | 236 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 240 |
| | | இலக்கணம் | தொன்மம் | 243 |
| 8 | மனிதம், ஆளுமை | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 254 |
| | **எல்லா உயிரும் தொழும்** | செய்யுள் | முகம் | 258 |
| | | | இரட்சணிய யாத்ரிகம்* | 260 |
| | | | சிறுபாணாற்றுப்படை* | 265 |
| | | துணைப்பாடம் | கோடைமழை | 271 |
| | | இலக்கணம் | குறியீடு | 273 |

| பின் இணைப்பு | ப. எண் |
|---|---|
| பாடப்பகுதியும் ஆசிரியர்களும் (செய்யுள், உரைநடை, துணைப்பாடம்) | 283 |
| கதை மாந்தர்கள் (துணைப்பாடம்) | 284 |
| பகுபத உறுப்பிலக்கணம் | 286 |
| அணி இலக்கணம் | 286 |
| திணை விளக்கம் | 291 |
| துறை விளக்கம் | 292 |
| கவிதைகள் | 294 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# மனப்பாடப் பகுதி

## இயல் : 1

### தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

அ.மா.தே. 23

1. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**- தண்டி**

## இயல் : 2

### நெடுநல்வாடை

PTA

2. வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

**- நக்கீரர்**

## இயல் : 3

### கம்பராமாயணம்

மார்ச் - 2020 | அ.மா.தே. 23 | PTA

3. "துன்பு உளதுஎனின் அன்றோ
    சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
    பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
    முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
    ஐவர்கள் உளர் ஆனோம்" (1995)

**- கம்பர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**4. யுத்த காண்டம் - வீடணன் அடைக்கலப் படலம்**

"குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை" (6507)

**- கம்பர்**

---

5. **திருக்குறள்**

**இல்வாழ்க்கை**

அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். ஆகஸ்ட் - 2021

**செய்நன்றி அறிதல்**

அ) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. மே - 2022

ஆ) நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. PTA

இ) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. PTA

**வெஃகாமை**

அ) அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

**வெகுளாமை**

அ) மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

ஆ) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். மார்ச் - 2023

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். ஜூலை - 22



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**ஊழ்**

PTA

அ) "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன்
உண்மை அறிவே மிகும்.

-திருவள்ளுவர்

## இயல் : 4

### இதில் வெற்றி பெற

மே - 2022

6. விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

- சுரதா

### புறநானூறு

7. அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே (206)

- ஔவையார்

## இயல் : 5

### தெய்வமணிமாலை

மார்ச் - 2023 PTA ஆகஸ்ட் - 2021

8. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும் - இராமலிங்க அடிகள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## இயல் : 6

### சிலப்பதிகாரம்

**புகார்க் காண்டம் - அரங்கேற்று காதை** ஜூலை - 22

**9. இசைக்கருவிகள் ஒலித்தமுறை** PTA

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை [95 - 142]

**- இளங்கோவடிகள்**

---

### திருக்குறள்

**அறிவுடைமை**

அ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்

ஆ) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் PTA
மெய்ப்பொருள் காண்பது அறிவு

இ) எதரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை அ.மா.தே. 23
அதிர வருவதோர் நோய்

**சிற்றினம் சேராமை**

அ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்

**வினைத்திட்பம்**

அ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

ஆ) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் அ.மா.தே. 23 மார்ச் - 2020
சொல்லிய வண்ணம் செயல்

இ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

**தூது**

அ) கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**உட்பகை**

அ) வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

**சூது**

அ) பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்

**- திருவள்ளுவர்**

## இயல் : 7

### புறநானூறு

11. காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும் (184)

**- பிசிராந்தையார்**

## இயல் : 8

### இரட்சணிய யாத்திரிகம்

**PTA**

12. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி

**- எச்.ஏ.கிருட்டிணனார்**

### சிறுபாணாற்றுப்படை

13. "எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்."

**- நத்தத்தனார்**




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் 1 உயிரினும் ஓம்பப் படும்

*மொழி*



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராம்மி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை, மாங்குளம், மதுரை.

**கற்றல் நோக்கங்கள்:**

- கவிஞரின் மொழிப்பற்றைத் தாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துதல்.
- மொழி வெளிப்படுத்தும் நடையியல் கூறுகளைப் படித்துணர்ந்து தமிழ் மொழியின் நுட்பம் அறிதல்.
- மரபுக் கவிதையினைப் பொருளுணர்ந்தும் சீர் பிரித்தும் படிக்கும் ஆற்றல் பெறுதல்.
- கடித இலக்கியத்தின் வாயிலாகச் சமூக உணர்வை வெளிப்படுத்தும் திறன் வளர்த்தல்.
- மொழியின் அடிப்படை இலக்கணத்தை அறிந்து பிழையின்றி எழுதும் திறன் பெறுதல்.

**பாடப்பகுதிகள்**

| | | |
|---|---|---|
| ❖ இளந்தமிழே! | - | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ❖ தமிழ் மொழியின் நடை அழகியல் | - | தி.சு .நடராசன் |
| ❖ தன்னேர் இலாத தமிழ் | | |
| ❖ தம்பி நெல்லையப்பருக்கு | - | பாரதியார் |
| ❖ தமிழாய் எழுதுவோம் | | |

ஜூலை -22



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



மொழி க

கவிதைப்பேழை

## இளந்தமிழே!

– சிற்பி பாலசுப்பிரமணியம்

3E7H85

### நுழையும் முன்

❖ தமிழ் மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் இலங்குகிறது. அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக்கவிஞர்கள் இலர் எனலாம். தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பது கவிஞர்களின் அவா.

### நூல்வெளி

❖ இக்கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. கவிஞர், பேராசிரியர், மொழி பெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்; பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்; மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்; மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்...........**

**(க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது**

**(உ) பொதிகையில் தோன்றியது**

**(ங) வள்ளல்களைத் தந்தது**

(அ) க மட்டும் சரி (இ) ங மட்டும் சரி

(ஆ) க, உ இரண்டும் சரி (ஈ) க, ங இரண்டும் சரி

**விடை: (ஈ) க, ங இரண்டும் சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறுவினா

**1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?** ஜூலை -22 | அ.மா.தே. 23

- ❖ சிவக்கும் வானம் செங்கதிரால் மலைமேட்டில் தலை சாய்க்கும்.
- ❖ உழைப்பில் சிவந்த கைகளை உடைய தொழிலாளர் தோள் மீதில் முத்துமுத்தாக வீற்றிருக்கும் வியர்வைத் துளிகள் ஆகியவற்றையெல்லாம் பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

## சிறுவினாக்கள்

**1. 'செம்பரிதி மலை மேட்டில்தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்'-இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- ❖ செங்கதிர்களைப் பரப்பும் மாலை நேரத்துச்சூரியன், மேற்கில் மலைமேட்டின் மேல் தலையைச் சாய்ப்பான்.
- ❖ அக்காட்சியைக் கண்ட கவிஞர் உலகுக்கு நாளெல்லாம் ஒளி தந்து உழைத்ததால் மலைமேட்டில் தலை சாய்க்கிறான் சூரியன் என்கிறார் .
- ❖ கதிரவன் மலைமேட்டில் (தலைசாய்க்கும்) மறையும் நேரத்தில் வானமெல்லாம் செக்கச்சிவந்து காட்சியளிக்கும்.
- ❖ இதனைக் கண்டு சுவைத்த கவிஞர், தாமும் அவ்வுணர்வைப் பெற வேண்டும் என்பதற்காக, நயமான சொற்களைக் கொண்டு, கவி பாடியுள்ளார்.
- ❖ இந்த வரிகளைப் படிக்கின்ற போதே, மனக்கண்ணால் இக்காட்சியைக் கண்டு சுவைக்க முடிகிறது.

**2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| **பழையன கழிதலும்புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல்** | **மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க் குயிலே! கூவி வா, வா!<br>-சிற்பி** |
| **நன்னூல்** | **பாலசுப்பிரமணியம்<br>சிற்பி பாலசுப்பிரமணியம்** |
| ❖ பழமை நடைமுறைகளைப் பயன்பாட்டில் இருந்து நீக்கியும், புதியனவாகி விட்ட சில நடைமுறைகளை இணைத்துக் கொள்வதும் குற்றமல்ல.<br>❖ காலம் மாறுதலுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வது கட்டாயமாகும். அதன்படி, தேவையற்ற சொல், பொருள், வழக்கம் எல்லாம் காலமாறுதலுக்கு ஏற்ப புதிய சொல், பொருள், வழக்கம் தேவை.<br>❖ புதிய வளர்ச்சியை நோக்கி பழமையைக் கைவிட வேண்டும் என்கிறார் நன்னூலார். | ❖ அந்தப் பழமை நலத்தை மீண்டும் புதிய வடிவம் கொடுக்க வேண்டும்.<br>❖ பழமையெல்லாம் ஒதுக்கி விடக்கூடாது. அவற்றைப் புதுப்பித்து சமுதாயத்திற்கு விழிப்புணர்வைக் கொடுக்க வேண்டும்.<br>❖ இத்தகைய தமிழின் பழமையைப் புதுமையாக்க, சமுதாயம் வளர்ச்சியடைய தமிழ்க்குயிலே மெய்சிலிர்க்குமாறு பாடி வா என்கிறார் சிற்பி பாலசுப்பிரமணியம். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நெடுவினா

**1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

ஆகஸ்ட் - 2021 மே - 2022

- ❖ எம் அருமைச் செந்தமிழே! செம்மையான சூரியன், மலை மேட்டில் தலையைச் சாய்க்கும் போது, வானமெங்கும் செந்நிறப் பூக்காடாகத் தோன்றும்.
- ❖ உழைப்பாளர்களின் கைகள் சிவந்து திரண்ட தோள்களில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய்க் காணப்படுகிறது.
- ❖ இக்காட்சியெல்லாம் நான் வியந்து பாட அன்னைத் தமிழே உனையன்றி வேறு துணை இல்லை.
- ❖ இயல், இசை, நாடகமென மூன்றாகத் தழைத்து வளர்ந்த தமிழே! முன்பு ஒரு காலத்தில் நீ, பாண்டியர் உருவாக்கிய சங்கத்தில் கொலு வீற்றிருந்தாய்! பாரி, காரி, ஓரி, ஆய், அதின், நல்லி, பேகன் என்னும் ஏழு வள்ளல்களைப் பெற்றெடுத்தாய்.
- ❖ உன் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பித்து, சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்க்குயிலே நீ மெய்சிலிர்க்கப் பாடி வா.
- ❖ "தென்றல் தவழும் குளிர்ந்த பொதிகை மலையில் தோன்றி வளர்ந்த தமிழே! தடைகள் உடைத்து எழுந்து வெளிப்படும் சிங்கம்போல் சீறி வரவேண்டும்" என்று, தமிழின் சீரளமைத் திறம் வியந்து, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

## இலக்கணகுறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செந்தமிழ், செந்நிறம், செம்பரிதி | - | பண்புத்தொகைகள் | முத்து முத்தாய் | - | அடுக்குத்தொடர் |
| சிவந்து | - | வினையெச்சம் | வியர்வை வெள்ளம் | - | உருவகம் |

## உறுப்பிலக்கணம்

**சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்** ஜூலை - 22

- ❖ சாய் - பகுதி
- ❖ ப் - சந்தி
- ❖ ப் - எதிர்கால இடைநிலை
- ❖ ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**விம்முகின்ற = விம்மு + கின்று + அ**

- ❖ விம்மு - பகுதி
- ❖ கின்று - நிகழ்கால இடைநிலை
- ❖ அ - பெயரெச்ச விகுதி.

**வியந்து = விய + த் (ந்) + த் + உ** PTA

- ❖ விய - பகுதி
- ❖ த் - சந்தி (ந் -ஆனதுவிகாரம்)
- ❖ த் - இறந்த கால இடைநிலை
- ❖ உ - வினையெச்ச விகுதி.

**இருந்தாய் = இரு + த்(ந்) + த் + ஆய்**

- ❖ இரு - பகுதி
- ❖ த் - சந்தி (ந் ஆனது விகாரம் )
- ❖ த் - இறந்த கால இடைநிலை
- ❖ ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## புணர்ச்சி விதி

1) **செம்பரிதி = செம்மை + பரிதி** ஆகஸ்ட் - 2021

**விதி:** ஈறு போதல் - செம் + பரிதி = செம்பரிதி

2) **வானமெல்லாம் = வானம் + எல்லாம்** PTA அ.மா.தே. 23 ஜுலை -22

**விதி:** உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - வானமெல்லாம்

3) **உன்னையல்லால் = உன்னை + அல்லால்**

**விதி:** இ ஈ ஐ வழி யவ்வும் - உன்னை + ய் + அல்லால்

**விதி:** உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே -உன்னையல்லால்

4) **செந்தமிழே = செம்மை + தமிழே** அ.மா.தே. 23

**விதி:** ஈறு போதல் -செம் + தமிழே

**விதி:** முன் நின்ற மெய் திரிதல் - செந்தமிழே

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"பொதிகை" என்பது எந்த மலையைக் குறிக்கும்?**

(அ) குற்றால மலை (இ) இமயமலை

(ஆ) விந்திய மலை (ஈ) சாமிமலை **விடை: (அ) குற்றால மலை**

2. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல் __________**

(அ) சூரியகாந்தி (இ) ஒளிப்பூ

(ஆ) சூரிய பார்வை (ஈ) சூரிய நிழல் **விடை: (ஈ) சூரிய நிழல்**

3. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' கவிதை, இடம்பெற்றுள்ள நூல் __________** அ.மா.தே. 23

(அ) சூரிய நிழல் (இ) நிலவுப்பூ

(ஆ) சர்ப்பயாகம் (ஈ) ஒளிப்பறவை **விடை: (ஈ) நிலவுப்பூ**

4. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் __________**

(அ) நிலவுப்பூ (இ) சூரிய நிழல்

(ஆ) ஒரு கிராமத்து நதி (ஈ) பூஜ்யங்களின் சங்கிலி **விடை: (இ) ஒரு கிராமத்து நதி**

5. **செம்பரிதி- இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.**

(அ) ஈறு போதல் (இ) ஆதிநீடல்

(ஆ) இனமிகல் (ஈ) முன் நின்ற மெய்திரிதல் **விடை: (அ) ஈறு போதல்**

6. **பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் __________**

(அ) கோப்பெருந்தேவி (இ) வேண்மாள்

(ஆ) தமிழன்னை (ஈ) ஔவையார் **விடை: (ஆ) தமிழன்னை**

7. **'இயம்பிடாய்' என்பதில் அமைந்த பகுதி __________**

(அ) இயம்பு (இ) இயம்பிடு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



(ஆ) இயம்பி (ஈ) இயம்பம் **விடை: (இ) இயம்பிடு**

8. **சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம் ________**

(அ) பாரதியார் (இ) தமிழ்

(ஆ) பாரதிதாசன் (ஈ) காமராசர் **விடை: (அ) பாரதியார்**

9. **'முத்தமிழே' என்பது ________ எனப் பிரியும்.**

(அ) முத் + தமிழே (இ) மு + தமிழே

(ஆ) முத்து + தமிழே (ஈ) மூன்று + தமிழ் **விடை: ஈ) மூன்று + தமிழ்**

## குறு வினாக்கள்

1. **தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர்?**
   - ❖ செவ்வானம்போல் தம் கைகள் சிவந்து நோகுமாறு, தொழிலாளர் காலை முதல் மாலை வரை உழைக்கின்றனர்.

2. **முத்தமிழ் ஈன்று தந்த வள்ளல்கள் யாவர்?**
   - ❖ அதியன், பாரி, காரி, பேகன், ஆய், ஓரி, நள்ளி ஆகியோர், முத்தமிழை ஈன்று தந்த வள்ளல்கள் ஆவார்.

3. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களை எழுதுக.**
   - ❖ ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

4. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
   - ❖ இலக்கிய சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும்.

5. **தொழிலாளர் வியர்வை வெள்ளம் எவ்வாறு வீற்றிருக்கும்?**
   - ❖ உழைக்கும் தொழிலாளரின் பருத்த தோள்மீது வியர்வை வெள்ளம், முத்து முத்தாய் வீற்றிருக்கும்.

6. **தென்தமிழ் எவ்வாறு சீறி வர வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?**
   - ❖ அடைத்துள்ள கூண்டை உடைத்துக்கொண்டு, சிங்கத்தைப்போலத் தென்தமிழ் சீறிவர வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்.

7. **சிற்பி பாலசுப்பிரமணியம் இருமுறை சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளதைக் கூறுக.**
   - ❖ சாகித்ய அகாடமி விருதை சிற்பி பாலசுப்பிரமணியம் இருமுறை பெற்றுள்ளவை மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் பெற்றுள்ளார்.

8. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகங்களைக் குறிப்பிடுக.**
   - ❖ கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறு வினாக்கள்

**1. குளிர் பொதிகைத் தென் தமிழே! சீறி வா எனக் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழை ஏன் கூவி அழைக்கிறார்? ஏன் சீறி வரவேண்டும் எனச் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுகிறார்?**

- ❖ உள்ளத்தில் பொங்கி வரும் உணர்வுகளை உணர்ச்சிமிகு கவிதையாக எழுத முத்தமிழே உதவி செய்கின்றது.
- ❖ பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்தில், தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சி செய்தது.
- ❖ பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்தது.
- ❖ அன்றிருந்த தமிழர் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வர வேண்டும் .
- ❖ இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும், கூட்டினை உடைத்திட நீயும் சிங்கம்போலச் சீறி புறப்பட்டு வர வேண்டும்.

**2. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்- குறிப்பு வரைக .**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பாலசுப்பிரமணியம் |
| **சிறப்புப் பெயர்** | : | சிற்பி. (எழுத்துகளை செதுக்குவதால் சிற்பி என கூறப்பட்டார்) |
| **பெற்றோர்** | : | சி. பொன்னுசாமி - கண்டியம்மாள் |
| **ஊர்** | : | ஆத்துப் பொள்ளாச்சி, கோவை |
| **பணி** | : | பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர், சாகித்ய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர் |
| **விருது** | : | "ஒரு கிராமத்து நதி" என்னும் கவிதை நூல் மற்றும் மொழிபெயர்ப்பு நூலுக்கும் |
| **படைப்புகள்** | : | ஒளிப்பறவை, சர்ப்ப யாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி, ஒரு கிராமத்து நதி |
| **சிறப்பு** | : | பேராசிரியர், கவிஞர், இதழாசிரியர், மொழி பெயர்ப்பாளர். |

உரைநடை உலகம்

மொழி க

# தமிழ்மொழியின் நடை அழகியல்

– தி.சு. நடராசன்

4NI6AG

## நுழையும் முன்

- ❖ உயர் தனிச் செம்மொழியாம் தமிழில் இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. கவிப் பொருளை அமைக்கின்ற விதத்தில், உணர்ச்சியைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச்செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நூல் வெளி

- ❖ தி.சு.நடராசன் எழுதிய 'தமிழ் அழகியல்' என்ற நூலிலிருந்து சில பகுதிகள் தொகுக்கப்பட்டுப் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர். திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படும் இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாடு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்________** ஜூலை -22

(அ) யாப்பருங்கலக்காரிகை (இ) தொல்காப்பியம்

(ஆ) தண்டியலங்காரம் (ஈ) நன்னூல் **விடை: (இ) தொல்காப்பியம்**

**2. கருத்து 1: இயல்பு வழக்கில்,தொடரமைப்பு எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு**

**கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது** PTA ஆகஸ்ட் - 2021

(அ) கருத்து 1 சரி (இ) இரண்டு கருத்தும் சரி

(ஆ) கருத்து 2 சரி (ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **விடை : (இ)இரண்டு கருத்தும் சரி**

**3. பொருத்துக:** PTA

| | |
|---|---|
| (அ) தமிழ் அழகியல் | 1. பரலி சு. நெல்லையப்பர் |
| (ஆ) நிலவுப் பூ | 2. தி.சு. நடராசன் |
| (இ) கிடை | 3. சிற்பி பாலசுப்பிரமணியம் |
| (ஈ) உய்யும் வழி | 4. கி. ராஜநாராயணன் |

(அ) 4, 3, 2, 1 (ஆ) 1, 4, 2, 3

(இ) 2, 4, 1, 3 (ஈ) 2, 3, 4, 1 **விடை: (ஈ) 2, 3, 4, 1**

### குறு வினாக்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.** ஜூலை -22

- ❖ அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகிறது தொல்காப்பியம்.
- ❖ எழுத்து, சொல், தொடர், பொருள் என, ஓர் உள்ளமைப்பைக் கொண்டுள்ளது தொல்காப்பியம்.
- ❖ கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



2. **"படாஅம் ஈத்த கெடாஅநல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான்பேசு"**
இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

**ஓசை நயமிக்க சொற்கள்:**

❖ படாஅம் ,கெடாஅ, கடாஅ.

**இலக்கணக் குறிப்பு:**

**செய்யுளிசை அளபெடைகள்:**

❖ சொற்களின் இடையில் அமைந்துள்ள உயிர் நெடில் எழுத்துகள், செய்யுளில் ஓசை நாயத்தை ஏற்படுத்த, நீண்டு ஒலித்துள்ளன .ஆகையால் இது செய்யுளிசை அளபெடை ஆகும்.

3. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

❖ விடியல் - காலைப் பொழுது

❖ வனப்பு - அழகு

❖ சூரியன் தன் செங்கதிர்களைப் பரப்பும் விடியலில், கீழ்வானத்தில் ஒருவகை வனப்பைக் காணலாம்.

## சிறு வினாக்கள்

1. **சங்கப் பாடல்களில் ஒலிக் கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் -விளக்குக.** PTA ஆகஸ்ட் - 2021

❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும்தான் தோன்றுகிறது.

❖ கவிதையும் இசையோடு உருவாகிறது. ஓசையும் பொருளும் கலைவடிவம் பெறுகிறது. மார்ச் - 2023
சங்கப் பாடல்களில்,

**"கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் புறம்புகொளற் கரிதே"**

❖ இவ்வரிகளில் த,த,ட,ற என்ற வல்லின மெய்களில் உணர்ச்சியின் ஒலிக்கோலங் காணலாம்.

**"படாஅம் ஈத்த கெடாஅநல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான்பேசு"**

❖ இப்பாடல் வரிகளில், ஒலிகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வந்து, சொல் விளையாட்டு நிகழ்த்துவதைக் காணலாம்.

❖ இவ்வாறு சங்கப் பாடல்களில் 'ஒலிக்கோலம்' குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.

## நெடுவினா

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.** மார்ச் - 23 PTA

**முன்னுரை:**

❖ கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளில் ஒலிக் கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் முக்கியமானவை. அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**நடையியல் கூறுகள்:**

- பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவையாகும்.

**ஒலிக்கோலங்கள்:**

- மொழி, சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் உருவாகிறது.
- கவிதையும் இசையோடு பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் பெறுகிறது.
- இதனையே பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

**"கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனீர் ஆயினும் புறம்புகொளற் கரிதே"**

- என்னும் பாடல் வரிகளில் அமைந்த வல்லினமெய்கள், உண்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன.

**சொற்புலமும் தொகை நிலையும்:**

- சொல்வளத்தில், உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
- ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும், பல பொருள் குறித்த ஓர சொல்லாகவும், துறைகளுக்கும் சூழல்களுக்கும் புனைவுகளுக்கும் சொல்லே களமாய் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.
- முல்லைக்கலியில் காளைகளின் இனம் பற்றிய சொற்களும், 'கிடை' என்னும் குரு நாவலின் ஆடுகளின் அடையாளங்களும் பல பெயர்களில் காணப்படுகின்றன. தனிச்சொல்லாகவும் தொகை மொழியாகவும் வாக்கிய அமைப்பில் சொற்புலம் காணப்படுகிறது.
- தொகைநிலை என்று தொல்காப்பிய எச்சவியலில் பேசுகிறது. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு ஆகும்.
- சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இதுவே ஆகும்.

**தொடரியல் போக்குகள்:**

- ஒளிக்கோலமும், சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.

**முடிவுரை:**

- நடை அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாக உள்ளது. எனவே, கவிதையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் சங்க இலக்கியங்களில் பரவிக் காணப்படுகின்றன என்பதை இதன் மூலம் நாம் அறியலாம்.

---

**2. 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ் வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி நன்றியுரை எழுதுக.**

ஜூலை -22

**சொல்லோவியங்கள்**

**கவிதை நூல் வெளியீட்டு விழா**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

தமிழ்த்தாய் வாழ்த்து : மாணவர்கள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



| | |
|---|---|
| வரவேற்புரை | : தலைமை ஆசிரியர் |
| நூல் அறிமுக உரை | : திரு. இளமாறன் |
| நூல் வெளியிட்டு, வாழ்த்துரை | : மாவட்ட கல்வி அலுவலர் |
| முதல் பிரதியைப் பெறுபவர் | : கவிஞர் கலையரசன் |
| நன்றியுரை | : திரு. இரா.மோகன் |
| நாட்டுப்பண் | : உதவித் தலைமைஆசிரியர் |

**நன்றியுரை**

**அனைவருக்கும் இனிய அன்பான வணக்கம்.**

என்னால் உருவாக்கப்பட்ட இந்தக் கவிதை நூலை வெளியிடுவதற்கு விழாவிற்கு வருகை புரிந்து வாழ்த்திய சிறப்பு விருந்தினர் மாவட்ட கல்வி அலுவலர் அவர்களுக்கு பள்ளியின் சார்பாக என் நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூலை அறிமுகம் செய்து வாழ்த்திய அருமை நண்பர் கவிஞர். இளமாறன் அவர்களுக்கு என் கோடான நன்றிகள். முதல் பிரதியைப் பெற்று வாழ்த்துரை வழங்கிய எனது அருமை நண்பர் கவிஞர் கலையரசன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழா நடைபெற உறுதுணையாக இருந்த எங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் சக ஆசிரியர் அலுவலக நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விழா சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு தந்த என் அன்பு மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் மற்றும் ஒலி ஒளி அமைத்து தந்தவர்களுக்கும் நன்றிகள் பல. இந்த விழா சிறப்புடன் அமையத் தேவையான பணிகளை நிறைவாகச் செய்த அத்துனை நல் உள்ளங்களுக்கும் நன்றி! நன்றி!

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **'தமிழ் அழகியல்' என்ற நூலின் ஆசிரியர் ________**
   (அ) மா. இராசமாணிக்கம் (இ) சிற்பி. பாலசுப்பிரமணியம்
   (ஆ) தி.சு. நடராசன் (ஈ) வா.வே. சுப்பிரமணியம் **விடை: (ஆ) தி.சு. நடராசன்**
2. **காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல் ________**
   (அ) தொல்காப்பியம் (இ) புறநானூறு
   (ஆ) முல்லைக்கலி (ஈ) பதிற்றுப்பத்து **விடை: (ஆ) முல்லைக்கலி**
3. **'அழகின் சிரிப்பு' என்ற நூலின் ஆசிரியர் யார்?**
   (அ) பாரதிதாசன் (இ) பாரதியார்
   (ஆ) கவிமணி (ஈ) நாமக்கல் கவிஞர் **விடை: (அ) பாரதிதாசன்**
4. **பாடலின் தளத்தைப் பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது.________**
   (அ) சொற்றொடர் நிலை (இ) தொடரியல் வடிவம்
   (ஆ) ஒலிக்கோலம் (ஈ) சொற்புலம் **விடை: (இ) தொடரியல் வடிவம்**
5. **கவிதையின் இயங்காற்றல் என்பது ________**
   (அ) ஒலி (இ) சொல்
   (ஆ) நடை (ஈ) பொருள் **விடை: (ஆ) நடை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



6. **கருத்து :**1) முல்லைக் கலியில் எருதுகளின் பலஇனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
**கருத்து:** 2) சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.
(அ) கருத்து 1 தவறு (இ) கருத்து இரண்டும் சரி
(ஆ) கருத்து 1 சரி, 2 தவறு (ஈ) கருத்து 1 தவறு, 2 சரி **விடை: (இ) கருத்து இரண்டும் சரி**

7. **(அ) சங்க இலக்கியம், அகம், புறம் சார்ந்த செய்திகளைப் பாடப்பொருளாகக் கொண்டுள்ளது.**
**(ஆ) ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன. மேற்கூறியவற்றில் சரியானதைக் கண்டறிக.**
(அ) 'அ' மட்டும் (இ) 'அ' மற்றும் 'ஆ'
(ஆ) 'ஆ' மட்டும் (ஈ) இரண்டும் இல்லை **விடை: (இ) 'அ' மற்றும் 'ஆ'**

8. **பொருத்தமானதைக் கண்டறிக.**
(அ) பாவகை - ஐந்து (இ) பனி நீர் - தொகை மொழி
(ஆ) வஞ்சி - வெண்பா நடைத்தே (ஈ) காமர் வனப்பு - தொடரியல்போக்கு
**விடை: இ) பனி நீர் - தொகைமொழி**

9. **பொருந்தாததைத் தேர்க.**
(அ) கன்னி விடியல் - தொகைமொழி
(ஆ) பொய்படு சொல் - மறித்தாக்கம்
(இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத் தொடர்
(ஈ) கி. ராஜநாராயணன் - கிடை **விடை: (ஆ) பொய்படு சொல்-மறித்தாக்கம்**

10. **அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது ________**
(அ) தொல்காப்பியம் (இ) சங்க இலக்கியம்
(ஆ) மனித நடத்தை (ஈ) புராணம் **விடை: (அ) தொல்காப்பியம்**

11. **அகன் ஐந்திணைகளைப் பேசுவது ________**
(அ) நன்னூல் (இ) தொல்காப்பியம்
(ஆ) தண்டியலங்காரம் (ஈ) புறப்பொருள் வெண்பாமாலை
**விடை: (இ) தொல்காப்பியம்**

12. **இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையின் இலக்கியங்கள் படைக்கப்பட்ட நூல் ________**
(அ) தமிழ் (இ) ஆங்கிலம்
(ஆ) தெலுங்கு (ஈ) வடமொழி **விடை: (அ) தமிழ்**

13. **'நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை' எனும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் ________**
(அ) புறநானூறு (இ) நற்றிணை
(ஆ) அகநானூறு (ஈ) கலித்தொகை **விடை: (அ) புறநானூறு**

14. **'நீர்படு பசுங்கலம்' என்னும் அடிகளுக்குரிய நூல் ________**
(அ) புறநானூறு (இ) நற்றிணை
(ஆ) அகநானூறு (ஈ) கலித்தொகை **விடை: (இ) நற்றிணை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**15. தொகைநிலை, தொகை மொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல் ________**

(அ) எச்சவியல் (இ) இடையியல்

(ஆ) எழுத்தியல் (ஈ) உவமையியல் **விடை: (அ) எச்சவியல்**

## குறுவினாக்கள்

**1. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை யாவை?** மார்ச் - 2023

❖ உவமை, உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி போன்றவை, மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

**2. கலைமுழுமை பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது எது?** அ.மா.தே. 23

❖ அறம், பொருள், இன்பம் ஆகிய அறிவியல் சார்ந்த கருத்துகள், கலை உருவாக்கத்தின் போது சரிவர இணைந்திருக்கும் முழுமையே கலைமுழுமை என்று அழைக்கப்படுகிறது.

**3. தொல்காப்பியம் அகன் ஐந்திணைகளை எத்தகைய அறிவியல் பொருள்களோடு இணைக்கிறது?**

❖ அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'இலட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகிறது.

**4. இலக்கிய உருவாக்கத்தில் எவை இடம்பெற வேண்டும்?**

❖ இலக்கியத்தின் பயன்களாகிய அறம், பொருள், இன்பமாகவோ, வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும்.

**5. கவிதைநடையின் கூறுகள் யாவை?**

❖ ஒலிக் கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் பாட்டு அல்லது கவிதை நடையின் கூறுகளில் மிகவும் முக்கியமானவை ஆகும்.

**6. தமிழில் சில தொகை மொழிகளைக் கூறுக.**

❖ கன்னிவிடியல
❖ காமர் வனப்பு
❖ நகைக்கூட்டம்
❖ பனிநீர்
❖ தீநீர்
❖ சின்னீர்

**7. ஒலிப்பின்னல் என்றால் என்ன?**

❖ கவிதையும் இசையோடும் இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது.
❖ ஒளியிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி தொடங்குகிறது .
❖ ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன.
❖ இதனையே பனுவலின் + பாடலின் ஒலிப்பின்னல் என்று கூறுகிறோம்.

**8. சி. சு. நடராசன் இயற்றிய நூல்களைக் கூறுக.**

❖ கவிதையெனும் மொழி
❖ திறனாய்வுக் கலை
❖ தமிழ் அழகியல்
❖ தமிழின் பண்பாட்டு வெளிகள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**9. சொல்வளம் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது எவ்வாறு?**

- காளைகள் பற்றிய பல சொற்கள், முல்லைக்கலியில் நிரம்பிக் கிடக்கின்றன.
- ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார் 'கிடை' என்னும் குறுநாவலில் கி.இராஜநாராயணன்.
- இவ்வகையில் சொல்வளம், பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது என்பதை நாம் உணரலாம்.

## சிறுவினா

**1. சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.**

- தமிழ் மொழியில் உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு, பயனிலை என்று வருவதே மரபு. ஆனால், சங்கப் பாடல்கள் பலவற்றில் இந்நிலை மாறி வருகிறது. இதனைக் கவிதை மறுதலைத் தொடர் என்பர்.
- சிறப்பாக முடியும் பாடல்களின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வு நிலை பெரிதும் காணப்படுகிறது. சான்றாக பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கில் முரண்பாடான கருத்து உருவாகி உள்ளதைக் கூறலாம்.

**"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ**
**படுவழிப் படுக, இப்புகழ்வெய்யோன் தலையே!"**

என்ற இப்பாடலில் இடம்பெற்றுள்ள இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.

- 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் இப்பாடலின் இறுதியில் புலவர், நெடுஞ்செழியனுடைய உடலைப் புதைத்தால் புதை; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறார்.

கவிதைப்பேழை

மொழி க

# தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

5IAZBG

## நுழையும் முன்

- வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ். நிலத்தினும் பெரிது வானினும் உயர்ந்தன்று, கடலினும் ஆழமானது என்றெல்லாம் தமிழின் பரப்பையும் விரிவையும் ஆழத்தையும் புலவர் போற்றுவர். நிகரற்ற ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பவும் அதற்கு மேலாகவும் தமிழைப் போற்றும் புலவரின் பாடல் ஒன்று பாடமாக........ தெரியுமா?

**அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள்:**

- தண்டியலங்காரம்
- குவலயானந்தம்
- மாறனலங்காரம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள்:**

- ❖ தொல்காப்பியம்
- ❖ தொன்னூல் விளக்கம்
- ❖ வீரசோழியம்
- ❖ முத்து வீரியம்
- ❖ இலக்கண விளக்கம்

## நூல்வெளி

❖ தண்டியலங்காரம், அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களுள் ஒன்று. பாடப்பகுதி பொருளணியியல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் தண்டி ஆவார். இவர் கிபி (பொ.ஆ) 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது; இலக்கண நூலார், உரையாசிரியர்கள் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்றது.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!"-இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்.** PTA ஜூலை -22

(அ) அடிமோனை, அடிஎதுகை (இ) அடிஎதுகை, சீர்மோனை
(ஆ) சீர்மோனை, சீர்எதுகை (ஈ) சீர்எதுகை, அடிமோனை **விடை: (இ) அடிஎதுகை, சீர்மோனை**

### சிறுவினா

1. **'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' -இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** மார்ச் - 2020 ஆக - 2021 PTA

**இடம்:**

❖ இப்பாடலடி தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கணநூல் உரைமேற்கோள் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

❖ தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கூறும் இத்தொடருக்கு, "ஒலிக்கும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில் இருள் போக்கும்" என்பது பொருளாகும்.

**விளக்கம்:**

❖ மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே பொதிகையில் பிறந்து, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்குவது தமிழ். அதுபோல கடலால் சூழப்பட்ட இவ்வுலகின் புற இருளைப் போக்குவது கதிரவன்.

❖ "அக இருளைப் போக்குவது தமிழ்; புற இருளைப் போக்குவது கதிரவன்".

## இலக்கணகுறிப்பு

மார்ச் - 2023 ஆக - 2021

| | | | |
|---|---|---|---|
| வெங்கதிர் | - பண்புத்தொகை | வந்து | - வினையெச்சம் |
| உயர்ந்தோர் | - வினையாலணையும் பெயர் | ஒலிநீர் | - வினைத்தொகை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலாத | - | இடைக் குறை | இருளகற்றும் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |

**உறுப்பிலக்கணம்**

**உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்** PTA

- உயர் - பகுதி
- த் - சந்தி
- 'த்'-'ந்'ஆனது விகாரம்
- த் - இறந்த கால இடைநிலை
- ஓர் - பலர்பால் வினைமுற்றுவிகுதி.
(ஆர் - என்னும் விகுதியில் ஈற்று அயல் எழுத்தான 'ஆ' என்பது 'ஓ' ஆகத் திரிந்தது)

**விளங்கி = விளங்கு + இ** PTA

- விளங்கு - பகுதி
- இ - வினையெச்சவிகுதி

**வந்து = வா (வ) + த்(ந்) + த் + உ**

- வா - பகுதி
- வ - எனக் குறுகியது விகாரம்
- த் - சந்தி;'த்'- 'ந்'ஆனது விகாரம்
- த் - இறந்தகால இடைநிலை
- உ - வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி**

1) **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**
**விதி:** உயிர்வரின் உக்குறள்மெய்விட்டோடும் - (ஆங்க் + அவற்றுள்)
**விதி:** உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - ஆங்கவற்றுள்

2) **தனியாழி = தனி + யாழி** மார்ச் - 2023 அ.மா.தே. 23
**விதி:** இ ஈ ஐ வழி யவ்வும் - தனி + ய் + ஆழி
**விதி:** உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - தனியாழி

3) **வெங்கதிர் = வெம்மை + கதிர்**
**விதி:** ஈறு போதல் - வெம் + கதிர்
**விதி:** முன் நின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

4) **இருளகற்றும் = இருள் + அகற்றும்**
**விதி:** "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே "என்ற விதிப்படி "இருளாகற்றும்" எனப் புணர்ந்தது.

5) **கதிரொன்று = கதிர் + ஒன்று**
**விதி:** "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி 'கதிரொன்று' எனப் புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **அணி இலக்கணத்தையும் கூறும் நூல்களுள் ஒன்று ________**
(அ) தண்டியலங்காரம் (இ) குவலயானந்தம்
(ஆ) வீரசோழியம் (ஈ) மாறனலங்காரம் **விடை: (ஆ) வீரசோழியம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



2. **தண்டியலங்கார இலக்கண நூலின் ஆசிரியர் ________**

(அ) முத்துவீரன் (இ) மாறன்

(ஆ) தண்டி (ஈ) காவியதர்சன் **விடை : (ஆ) தண்டி**

3. **'தமிழின் விரிவை' உணர்த்தப் புலவர் கையாளும் தொடர் ________**

(அ) வலிமைமிக்கது (இ) வானினும் உயர்ந்தன்று

(ஆ) கடலினும் ஆழமானது (ஈ) நிலத்தினும் பெரிது **விடை : (இ) வானினும் உயர்ந்தன்று**

4. **'தன்னேர் இலாத தமிழ்'என்னும் பாடலில்அமைந்துள்ளது ________**

(அ) பொது வேற்றுமை அணி (இ) இடவேற்றுமை அணி

(ஆ) பொருள் வேற்றுமை அணி (ஈ) சொல் வேற்றுமை அணி

**விடை: (ஆ) பொருள்வேற்றுமை அணி**

5. **அணி இலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல் ________**

(அ) முத்துவீரியம் (இ) மாறனலங்காரம்

(ஆ) வீரசோழியம் (ஈ) இலக்கண விளக்கம் **விடை: (இ) மாறனலங்காரம்**

6. **ஈறுபோதல், முன் நின்ற மெய் திரிதல் -எச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி ________**

(அ) கருங்குயில் (இ) வெங்கதிர்

(ஆ) நெடுந்தேர் (ஈ) முதுமரம் **விடை: (இ) வெங்கதிர்**

7. **சரியானதைத் தேர்க:**

| | |
|---|---|
| (அ) வீரசோழியம் | (1) நாவல் |
| (ஆ) குவலயானந்தம் | (2) அணி இலக்கணம் |
| (இ) முத்து வீரியம் | (3) சிறுகதை |
| (ஈ) மாறனலங்காரம் | (4) பொருளிலக்கணம் |

**விடை: (ஆ) குவலயானந்தம் - அணி இலக்கணம்**

8. **பொருந்தாததை தேர்க.**

| | |
|---|---|
| (1) தமிழ் மொழி | (அ) பொதிகை மலை |
| (2) தண்டியலங்காரம் | (ஆ) தண்டி |
| (3) தொல்காப்பியம் | (இ) இலக்கிய நூல் |
| (4) காவியதர்சம் | (ஈ) வடமொழி இலக்கணம் |

**விடை: (3) தொல்காப்பியம் -இலக்கிய நூல்**

9. **பொருத்துக:**

| | |
|---|---|
| (அ) வெங்கதிர் | (1) இடைக்குறை |
| (ஆ) இலாத | (2) வினையெச்சம் |
| (இ) வந்து | (3) வினையாலணையும் பெயர் |
| (ஈ) உயர்ந்தோர் | (4) பண்புத்தொகை |

(அ) 4, 2, 3, 1 (ஆ) 4, 1, 3, 2 (இ) 4, 1, 2, 3 (இ) 2, 3, 1, 4 **விடை: (இ) 4, 1, 2, 3**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



10. **தமிழ் தோன்றிய மலை ________**

(அ) விந்தியமலை (இ) பொதிகை மலை

(ஆ) இமயமலை (ஈ) குடகு மலை **விடை: (ஆ) பொதிகை மலை**

11. **இருளைப் போக்கும் இரண்டு ________**

(அ) அறிவு, தமிழ் (இ) கதிரவன், நிலவு

(ஆ) அறிவு, ஞானம் (ஈ) கதிரவன், தமிழ் **விடை: (ஈ) கதிரவன், தமிழ்**

12. **காவியதர்சன் என்பது ________**

(அ) வடமொழி இலக்கண நூல் (இ) வரலாற்று நூல்

(ஆ) மலையாள இலக்கிய நூல் (ஈ) புராண நூல் **விடை: (அ) வடமொழி இலக்கண நூல்**

## குறுவினாக்கள்

1. **அணி இலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
   - ❖ தண்டியலங்காரம்
   - ❖ மாறனலங்காரம்
   - ❖ குவலயானந்தம்

2. **அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
   - ❖ தொல்காப்பியம்
   - ❖ இலக்கண விளக்கம்
   - ❖ தொன்னூல் விளக்கம்
   - ❖ வீரசோழியம்
   - ❖ முத்துவீரியம்

3. **தமிழ் மொழி எத்தகைய வலிமை மிக்கது?**
   - ❖ வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமைமிக்கது தமிழ்மொழி.

4. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**
   - ❖ பொதுவியல்
   - ❖ பொருளணியியல்
   - ❖ சொல்லணியியல்

5. **ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே -விளக்குக.**
   - ❖ பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே ஆகும்.

6. **புற இருளைப் போக்குவது எது?**
   - ❖ மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளைப் போக்குவது கதிரவனே ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறுவினாக்கள்

**1. தன்னேரிலாத தமிழின் சிறப்பு குறித்து தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது?**

- இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளைப் போக்குவது கதிரவன்.
- குளிர்ச்சிப் பொருந்திய பொதிகை மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதும் எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாத அளவிற்கு இருப்பது தமிழ் மொழியே ஆகும்.
- புற இருளைப் போக்கும் கதிரவனைப்போல அக இருளைப் போக்கும் தமிழ் மொழிக்கு நிகர் எம்மொழியும் இவ்வுலகில் இல்லை என்று தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல் உணர்த்துகின்றது.

---

**2. பொருள் வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.**

**இலக்கணம்:**

- செய்யுளில் இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், அவற்றை ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறுவது, 'பொருள் வேற்றுமை அணி' ஆகும்.

**சான்று:**

**ஓங்க லிடைவந்து உயர்ந்தோர்தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து)இருளகற்றும்-ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று ) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

**விளக்கம்:**

- இப்பாடலில் தமிழ் மொழிக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமை முதலில் கூறப்பட்டுள்ளது. பின்னர், அவற்றுள் தமிழ்மொழி தன்னேரிலாதது எனும் தன்மை வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இப்பாடலில் ஒற்றுமையை முதலில் கூறிப் பின் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறியுள்ளதால் இப்பாடல் வேற்றுமை அணியின் ஒரு பிரிவான பொருள் வேற்றுமை அணியாக அமைந்துள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



விரிவானம்

மொழி க

# தம்பி நெல்லையப்பருக்கு

– பாரதியார்

5XTUCS

## நுழையும் முன்

❖ உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில் சொல்ல வேண்டியவற்றை வெளியிடும் முறை உண்டு. கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். தனிப்பட எழுதும் கடிதங்களிலும் ஈர்க்கும் மொழியில் அழுத்தமான எண்ணங்களைத் தந்து அவற்றைப் பொதுவெளிக்கு உரியதாக்குபவர்களும் இருக்கிறார்கள். காலத்தின் குரல்களான அக்கடிதங்களில் மொழி, வீறுபெறுகிறது.

## தெரிந்து தெளிவோம்

❖ எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879 இல் வெளியிட்டார். அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்ட பாரதி, ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6-8-1919 இல் கடிதம் எழுதினார். பலவிதமான குற்றங்களையுடைய அந்நூலை நல்ல இனிய தமிழ் நடையில் அமைத்துத் தருவேன் என்று குறிப்பிட்டார். ஆனால், அவர் ஆசை நிறைவேறவில்லை. வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறு பதிப்பாக இளசை மணி என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.

## தெரியுமா?

❖ பரலி சு. நெல்லையப்பர் விடுதலைப் போராட்ட வீரர். கவிஞர்,எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப் பாட்டு, முரசுப் பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர். பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகவும் லோகோ பகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

## நூல்வெளி

❖ மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா. அ. பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் இடம் பெற்றிருக்கிறது . பாரதி. பதினைந்து வயதில் கல்வி கற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல் அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்தி கேசவருக்கு எழுதிய கடிதம் வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரை விட ஏழு ஆண்டுகள் இளையவரான பரலி சு.நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



தம்பியாகவே கருதி அன்பு காட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்து கொள்ளத் துணைபுரிகின்றன.

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.**

மார்ச் - 2023 | ஆகஸ்ட் - 2021

**முன்னுரை:**

❖ "நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா" எனப் போற்றப்படும் பாரதி, மண்ணில் வேரூன்றிய வெள்ளையரைத் தன் பாடல் திறத்தால் வேர் அறுக்கச் செய்தவர். அந்தப் பாரதி, தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக அறியப்படும் மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மொழிப் பற்று:**

❖ மகாகவி பாரதியார்,பன்மொழிப் புலமை பெற்றவர். புலமை பெற்ற மொழிகளில் எல்லாம் உயர்ந்த மொழியாகத் தமிழ் மொழியைக் காட்டுகிறார் .அதனை,

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்"**

என்ற அடிகளால் உறுதிப்படுத்துகிறார் .இது, அவரின் மொழிப்பற்றை வெளிப்படுத்துகிறது.

**நெல்லையப்பருக்கு வேண்டுகோள்:**

❖ நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதத்திலும்,"தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள். புதிய புதிய சிந்தனைகள், புதியபுதிய உண்மைகள், புதியபுதிய இன்பங்கள் தமிழில் வளர்ந்து கொண்டே இருக்கவேண்டும்.

❖ தமிழ், செழுமை அடைய வேண்டும் என்னும் தம் விருப்பத்தை வேண்டுகோளாக வைக்கிறார்.இங்கே பாரதியின் மொழிப்பற்று விருப்பமாக வெளிப்படுகிறது என்பதை அறியலாம்.

**சமூகப் பற்று:**

❖ சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண், பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும்.

❖ ஆண் உயர்ந்தவன், பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும். அந்நிலை மாறவே ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள்; அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை என்கிறார் பாரதியார்.

❖ பெண்ணை வீட்டிற்குள் அடைத்தவன் தன் கண்ணை இழந்த குருடன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி, ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார்.

❖ சமூகம் வளர்ச்சியடைய தொழில் பெருக வேண்டும். சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கைச் சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தமிழ் மொழியில் உருவாக்கிட வேண்டும் என்று கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகிறார் பாரதியார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**கடிதம் எழுதுக! பேசுக!:**

❖ "தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க! தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிகள் பெருகுக! அந்தப் பள்ளிகளில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க" என்று, நெல்லையப்பரை எழுதச் சொல்கிறார். வணிகமும் இயந்திரங்களும் பெருக வேண்டும் எனப் பேசுக; முயற்சிகள் ஓங்க வேண்டும் என்று பாரதியின் சமூகப்பற்று தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை:**

❖ பாரதியின் எண்ணங்கள் வண்ணங்களாகும் வகையில் அவருடைய கடிதத்தில் உள்ளபடி, ஒவ்வொருவரும் மொழிப்பற்று,சமூகப்பற்று உடையவராக வாழவேண்டும் என்பதை இக்கடிதம் மூலம் நாம் அறிய முடிகிறது.

## இனிக்கும் இலக்கணம்

மொழி க

தமிழாய் எழுதுவோம்

6DCPE4

## பாடநூல் வினாக்கள்

### இலக்கணத் தேர்ச்சிகள்

1. **பிழையான தொடரைக் கண்டறிக.** PTA ஜூலை -22

(அ) காளைகளைப் பூட்டிவயலை உழுதனர்.

(ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

(இ) காளையில் பூத்தமல்லிகை மனம் வீசியது.

(ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. **விடை : (இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது**

2. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.** ஜூலை -22

(அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

(ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

(இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

(ஈ) மயில்கள் விறலியரைப்போல் ஆடுகின்றன. **விடை: (அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் -இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.** ஜூலை -22

**முடிந்தால் தரலாம்:** நீ கேட்ட பொருளை, என்னால் கொடுக்க முடிந்தால் தரலாம்.

**முடித்தால் தரலாம்:** என் புத்தகத்தை உனக்கு, நான் தேர்வை எழுதி முடித்தால் தரலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- ❖ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். (ந,ண,ன/ல,ள,ழ/ற,ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்)
- ❖ எழுவாய், பயனிலை,செயப்படுபொருள் அமையத் தொடர்களை எழுத வேண்டும்.
- ❖ தொடர்களில் வினைச்சொற்களில் கால வேறுபாடு உணர்ந்து எழுத வேண்டும்.
- ❖ திணை, பால், எண், இடம் என்பனவற்றை எழுதும்போது, தெளிவாக உணர்த்த வேண்டும்.
- ❖ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். எனவே, நிதானமாக எழுதுவது நல்லது.
- ❖ நிறுத்தக்குறிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- ❖ கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில், நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்?**

(அ) இயல்பாகப் புணரும் (இ) லகரம் னகரமாகும்
(ஆ) லகரம் டகரமாகும் (ஈ) லகரம் றகரமாகும் **விடை: (ஈ) லகரம் றகரமாகும்**

**2. எழுதும்போது வரும் பிழைககளை________ வகையாகக் கொள்ளலாம்.**

(அ) 3 (ஆ) 4
(இ) 5 (ஈ) 6 **விடை: (ஆ) 4**

**3. தமிழ் எழுத்துகள் மொத்தம்________**

(அ) 90 (ஆ) 246
(இ) 216 (ஈ) 247 **விடை: ஈ) 247**

**4. ந,ண,ன,ற,ர,ல,ழ,ள இவ்வெட்டு எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து________**

(அ) ர (ஆ) ல
(இ) த (ஈ) ந **விடை: ஈ) ந**

**5. க்ரீடம், ப்ரியா -என்பவை....... மொழிச் சொற்கள்.**

(அ) வடமொழி (ஆ) அரபு மொழி
(இ) தமிழ்மொழி (ஈ) தெலுங்கு **விடை: அ) வடமொழி**

**6. தமிழ்ச்சொல்________ மெய்யோடு முடியாது .**

(அ) வல்லினம் (ஆ) மெல்லினம்
(இ) இடையினம் (ஈ) உயிர்மெய் **விடை: அ) வல்லினம்**

**7. ஆய்த எழுத்து சொல்லின்________ வரும்.**

(அ) முதலில் (ஆ) இடையில்
(இ) கடையில் (ஈ) ஈற்று **விடை: இ) இடையில்**

**8. தனிக் குறிலை அடுத்து வராத ஒற்றுகள் எவை?**

(அ) க், ச் (ஆ) ர், ழ்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



(இ) த், ம் (ஈ) க், ப் **விடை: ஆ) ர்,ழ்**

9. **சரியானவற்றைக் கண்டறிக.**

(அ) இயக்குனர் (ஆ) இயக்குநர்

(இ) உறுப்பினர் (ஈ) வீட்டினர்

1) அ சரி 2) ஆ, இ சரி 3) ஈ சரி 4) ஆ மட்டும் சரி

**விடை: 4) ஆ மட்டும் சரி**

10. **தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள்**

(அ) 136 (ஆ) 120 (இ) 126 (ஈ) 116

**விடை: (இ) 126**

## குறுவினாக்கள்

1. **எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க சில குறிப்புகள் தருக.**

❖ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.

❖ ந,ண,ன/ல,ள,ழ/ற,ர ஒலிப்பு வேறுபாடுகளைத் தெளிவாக ஒலிக்க வேண்டும்.

❖ எழுத்துகளை முறை மாற்றி ஒலி எழுப்பினால், பொருள் வேறுபடும் என்பதை அறிதல் வேண்டும்.

❖ எழுதப் பழகும் தொடக்கக் காலத்தில் வாய்விட்டு ஒலித்து உச்சரித்தபடி எழுதிப் பழக வேண்டும்.

❖ வேகமாக எழுத்துத் தெளிவு இல்லாமல் எழுத முயற்சி செய்வது, பிழை மலிய வழி வகுக்கும்.

❖ எகர, ஏகார, ஒகர, ஓகார உயிர்மெய் எழுத்துகளின் வேறுபாடு புரிந்து எழுத வேண்டும்.

2. **எழுதும் போது எப்படிப் பிழைகளைத் தவிர்க்கலாம்?**

❖ சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது , பிழைகளைத் தவிர்க்க முடியும்.

(எ.கா) அறம் -அரம் / குறை - குரை / வளம் - வலம் / களம் - கலம் / போனாள் - போனால்/ கள்-கல் /மழை -மலை/ அழை -அலை.

3. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

❖ எழுத்துப் பிழை

❖ சொற்பொருள் பிழை

❖ சொற்றொடர்ப் பிழை

❖ பொதுவான பிழைகள் சில என வகைப்படுத்தலாம்

4. **சொல்லில் ஆய்த எழுத்தின் நிலை குறித்து எழுதுக**

❖ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

❖ தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.

**சான்று: அஃது, எஃகு, கஃசு.**

5. **தனிக் குறிலை அடுத்து ரகரம் வரின் எவ்வாறு எழுத வேண்டும்?**

❖ தனிக் குறிலை அடுத்து ரகரம் வரின் அதனைத் தமிழ் இயல்புக்கு ஏற்பத் திருத்தி எழுத வேண்டும்.

**சான்று:** நிர்வாகம் - நிருவாகம் : கர்மம் - கருமம், கன்மம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்

1. **"ஆழிவரம்" என்னும் சொல்லின் பொருள் யாது?**
   "ஆழிவரம்" என்னும் சொல்லின் பொருள் கடற்கரை.
2. **பொருள் கூறுக: எல்லி, ஆழி, கால்.**
   சூரியன்; மோதிரம்; காற்று.
3. **"வசனநடை கைவந்த வள்ளலார்" எனப் புகழப்படுபவர் யார்?**
   ஆறுமுக நாவலர்.
4. **விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?**
   பெர்சிவல் பாதிரியார்.
5. **திருவாவடுதுறை ஆதினம் ஆறுமுக நாவலருக்கு வழங்கிய பட்டம் எது?**
   நாவலர்.

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.**

1. **Learning is a Treasure that will follow its owner everywhere.** PTA
   ❖ கற்றல் எல்லா இடங்களிலும் அதன் உரிமையாளரைப் பின்பற்றும் ஒரு கருவூலமாகும்.
2. **A new language is a new life.** PTA மே - 2022
   ❖ ஒரு புது மொழியை அறிவது, புது வாழ்வுக்கு வழியாகும்.
3. **If you want people to understand you, speak their language.** PTA
   ❖ மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நீ அவர்கள் மொழியில் பேசு.
4. **knowledge of languages is the doorway to wisdom .** PTA மே - 2022
   ❖ மொழிகளின் அறிவு ஞானத்தின் வழித்தடம்.
5. **The limits of my language are the limits of my world.** PTA மே - 2022
   ❖ என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை, மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது .பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது .மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்ப்பவரும் மக்களே. மே - 2022 ஆக - 2021



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- மொழி வரலாறு (மு. வரதராசனார்)

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?
2. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
3. தாய், முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி எது?
4. மொழி வளர்ச்சி எத்தனைப் பொறுத்தது?
5. மொழிக்கு ஆசிரியராகவும், மாணவராகவும் உள்ளவர் எவர்?

## இலக்கிய நயம் பாராட்டுக

PTA

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி!

**- கண்ணதாசன்.**

**திரண்ட கருத்து:**

மூன்று சங்கங்கள் அமைத்து முதுபெரும் புலவர்களைக் கூட்டி ,அச்சங்கத்தின் உள்ளே அளப்பரிய சொற்பொருளால் சுவை மிகு கவிதைகளை இயற்றி, அற்புதங்கள் எல்லாம் அமைந்த தமிழ் மூதாட்டியே! எனப் பாடியுள்ளார் கவியரசு கண்ணதாசன்.

**மையக் கருத்து:**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைகளை அருமையாக எடுத்துக் கூறுகிறார் கவியரசு கண்ணதாசன்.

**தொடை நயங்கள்:**

**"தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்"**

பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய நயங்கள் அமையப் பாடுவது தொடை நயங்கள் ஆகும்.

**மோனை நயம்:**

முதல் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயமாகும்.

**சான்று:** முச்சங்கம் - முதுபுலவர்.
அச்சங்கம் - அளப்பரிய.

**எதுகை நயம்:**

இரண்டாம் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**சான்று:** முச்சங்கம் -அச்சங்கம்
சொற்சங்கம் - அற்புதங்கள்

**இயைபு நயம்:**

செய்யுளில் அடிகளின் கடைசி எழுத்தோ ஓசையோ அசையோ ஒன்றுபோல் இயைந்து வருவது இயைபு நயம் ஆகும்.

**சான்று:** தமை **கூட்டி**
பொருள் **கூட்டி**
கவி **கூட்டி**
பெருமாட்டி

**சந்த நயம்:**

**"சந்தம் பாட்டுக்குச்சொந்தம்"**

பாடலில் எதுகை, மோனை நயங்கள் சிறப்பாக அமைந்து இனிய ஓசையோடு பாடுவதற்கு ஏற்ப அமைந்துள்ளதால் இதில் சந்தநயம் அமைந்துள்ளது.

**சுவை நயம்:**

பாடலில் தமிழின் பெருமைகளைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் பெருமிதச்சுவை பயின்று வந்துள்ளது.

**அணி நயம்:**

கவிஞர் தமிழின் பெருமையைச் சற்று உயர்வாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி வந்துள்ளது.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு:**

தமிழின் பெருமைகள்.

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. **தாமரை இலை நீர் போல**
   - ❖ நாம் இவ்வுலக ஆசைகளின் மீது **தாமரை இலை நீர் போல** பற்று இல்லாமல் இருத்தல் வேண்டும்.
2. **கிணற்றுத் தவளை போல** PTA
   - ❖ உலகில் சில மக்கள் **கிணற்றுத் தவளை போல** உலக அறிவு இல்லாமல் பாட அறிவை மட்டும் உடையவர்களாக வாழ்கின்றனர்.
3. **எலியும் பூனையும் போல** அ.மா.தே. 23
   - ❖ பாலாவும் புவனாவும் **எலியும் பூனையும் போல** சண்டையிட்டுக் கொண்டனர்.
4. **அச்சாணி இல்லாத தேர் போல** அ.மா.தே. 23
   - ❖ குடும்பத் தலைவர் இல்லாத வீடு **அச்சாணி இல்லாத தேர் போல** தடுமாறுகிறது.
5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல** மார்ச் - 2020 அ.மா.தே. 23
   - ❖ தமிழாசிரியர் கற்பித்த இலக்கணப் பாடம் மாணவர்களுக்கு **உள்ளங்கை நெல்லிக்கனி போல** தெளிவாகப் புரிந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**6. நகமும் சதையும் போல** மார்ச் - 2020

❖ தம்பதியர் நகமும் சதையும் போல ஒன்றிணைந்து வாழ்வர்.

**ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள்:**

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணை நிற்கும்- இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

❖ தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும்திறன் - பயன் - இன்றைய நிலை.

**முன்னுரை:**

தாய்மொழி என்பது நம் கண் போன்றது. பிற மொழி என்பது கண்ணாடி போன்றது.ஆம் தாய்மொழி என்பது ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வழியே ஆகும். சிலர் சிறுவயதில் முதன்முதலாக கற்கும் மொழி நம் தாய் மொழி. அந்தத் தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி பின்வருமாறு காணலாம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை:**

தாய் கற்பிக்கும் மொழியே, உலகை நாம் அறியவும், பிறரிடம் பேசவும் துணையாகிறது. கற்பதை அவரவர் தாய்மொழியில் கற்பது சிறப்பு .அப்போதுதான் படிப்படியான அறிவு வளரும்; சிந்தனை தூண்டப்படும் புதுமைகள் கண்டறியப்படும். எனவே, தாய் மொழி வழிக் கல்வி தேவை என்பதை உணர முடிகிறது.

**தாய்மொழிச் சிந்தனை:**

தாய்மொழி என்றால் தாயார் புகட்டிய மொழி. தாயின் உடலில் இருந்துதான் நம் உடல் தோன்றியது. அவள் ஊட்டிய அமுதத்திலிருந்துதான் நம் உடல் வளர்ந்தது. அவள் சொன்ன வார்த்தையிலிருந்துதான் அறிவு உண்டாயிற்று. நாம் எத்தனை மொழி கற்று அறிவுற்றாலும் மீண்டும் நம்முடைய தாய்மொழியில் மொழிபெயர்த்தால்தான் பொருள் சரிவர விளங்கும்.சிந்தனை வளர்வதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாக உதவும். இலக்கியத்திற்கு 'நோபல் பரிசு' பெற்ற தாகூர், தம் 'கீதாஞ்சலி'யைத்தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதலில் எழுதினார்.

**அறிஞர்களின் பார்வை:**

ஜப்பான், ரஷ்யா, சீனா ஜெர்மன், பிரான்சு, இங்கிலாந்து ,ஸ்பெயின், கியூபா போன்ற நாடுகள், தொழில் வளத்திலும், அறிவியல் முன்னேற்றத்திலும் சிறந்திருப்பதை நாம் அறிவோம். அந்த நாடுகளில் மக்கள் பெறும் கல்வி அவரவர் தாய்மொழியில் இருப்பதே ஆகும் என்பதை அறிஞர் பலர் கூறுகின்றனர். சிந்தனை மிக்க அறிஞர்கள், தாய்மொழிக் கல்வியே வளம் சேர்க்கும் என்பதைப் பல வகைகளிலும் வலியுறுத்தியே வருகின்றனர்.

**கற்கும் திறன்:**

**"தாய் மொழியைக் கற்க தவறியவர்கள் சுவாசிக்கத் தெரியாத மனிதர்கள் ஆவார்"**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி மூலமாகத்தான். தாய்மொழி வழிக் கற்கும் போது சிந்தனை ஆற்றல் மிகுதியாகும். தாய் மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை; தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை.

**பயன்:**

தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச்சிறந்த அறிஞர்களாக மேதைகளாக குழந்தைகள் வளரும். அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்வி கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றைய நிலை:**

நம் நாட்டில், குறிப்பாக தமிழகத்தில் தாய்மொழி வழிக் கல்வியை ஒதுக்கிவிட்டு, ஆங்கில வழிக் கல்வியையே பலரும் விரும்புகின்றனர். இதனால் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தையும் முழுமையாகக் கற்காமல்,தாய்மொழியான தமிழையும் மறந்து போகின்றனர். தாய்மொழி வழிக் கல்வி, கற்பதைக் கௌரவக் குறைச்சலாகவும் கேவலமாகவும் நினைக்கின்றனர்.

**முடிவுரை:**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்புச் சாதனம் மட்டுமன்று. ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளம் என்பதை அனைவரும் உணர்ந்தாலே தாய்மொழியை அழிவிலிருந்து நாம் காக்கலாம்.

## மொழியோடு விளையாடு

### 1. எண்ணங்களை எழுத்தாக்குக

**விடை:**



கண்ணால் கண்டவற்றைக் கையால் கலை வடிவமாக்கி காண்பவர் கண்களுக்குக் காட்சி தரும் விருந்தாக்கி காலங்கள் கடந்தாலும் கண்களை விட்டு அகலா ஓவியம் ஆக்கினான் ஆதி மனிதன். உணவு தேடுவதோடு முடிந்து விடுவதில்லை ஆதி மனிதனின் வாழ்வு. உறைவிடமான குகையை அழகுபடுத்த முயல்கின்றான். அத்துடன் அனுபவங்களைப் போட்டு உருவங்களாக வரைந்தான். கருவிகளையும் கற்களையும் கொண்டு செய்தவன் தன் சிந்தனையைக் கலை வடிவம் கொடுக்க முயன்றுள்ளான். கற்காலத்தில் வாழ்ந்தாலும் கலை உணர்வுடன் வாழ்ந்துள்ளான் ஆதி மனிதன்.

**2. அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

"குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலியில் உன்னத அரவணைப்பு
அரவணைப்பில் அன்னையின் அன்பு"

**3. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழ் அறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.** ஆகஸ்ட் - 2021

**எ.கா:**

❖ கவிஞர் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் -கவிமணி. ( தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்).



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



| | |
|---|---|
| 1. தமிழ் அறிஞர் | முதல் இரு எழுத்துகளால் மறைக்கலாம் -மறைமலை அடிகள். |
| 2. தாய்மொழி | ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தருவன - தமிழ் ஒளி. |
| 3. சிறுகதை ஆசிரியர் | முதல் பாதி நவீனம் - புதுமைப்பித்தன். |
| 4. முன்னெழுத்து அரசன் | பின்னெழுத்து தமிழ் மாதம் -கோதை. |

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும், தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடுகள் | சரி - காரணம் | தவறு - மாற்றம் |
|---|---|---|
| பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல். | சரி.பொருள்களைத் தேடாது எடுக்க முடியும்.நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொது இடத்தில் எச்சில் துப்புதல். | | தவறு. துப்புவதற்குரிய இடத்தில் துப்ப வேண்டும். அதனால் நோய் பரவுவதை நாம் தடுக்கலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | தவறு. அதற்குரிய குப்பைத் தொட்டியில் போட வேண்டும். அதனால் வகுப்பறைகள் சுத்தமாக இருக்கும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல். | | தவறு. நமக்குப் பின் பலருக்கு பயன்படக் கூடியதாகும். பள்ளியின் சொத்தினைப் பாதுகாப்பது நமது கடமையாகும். |

## படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

அ.மா.தே. 23

Subscription - உறுப்பினர் கட்டணம்
Archive - காப்பகம்
Fiction - புனைவு
Manuscript - கையெழுத்துப் பிரதி
Biography - வாழ்க்கை வரலாறு
மே - 2022
Bibliography - நூல் நிரல்

## அறிவை விரிவு செய்

- பாரதியின் கடிதங்கள் - ரா.அ. பத்மநாபன்
- இலக்கண உலகில் புதிய பார்வை - டாக்டர் .பொற்கோ
- தமிழ் அழகியல் - தி.சு. நடராசன்
- பாரதி கட்டுரைகள்
- பாரதி கதைகள்
- காட்டுவாத்து - ந.பிச்சமூர்த்தி
- நெல்லூர் அரிசி - அகிலன்
- சுவரொட்டிகள் - ந.முத்துசாமி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் 2 பெய்யெனப் பெய்யும் மழை

*இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்*



**கற்றல் நோக்கங்கள்:**

- பருவம் மாற்றத்திற்கான காரணங்களை அறிந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு பெறுதல்.
- இயற்கை நிகழ்வினால் மனிதர்பெறும் உள்ள நெகிழ்ச்சியை உணர்ந்து இயற்கையை விரும்புதல்
- பழந்தமிழர் திணை வாழ்வைத் சங்கப்புலவர்கள் கவிதையாக்கிய நயத்தை உணர்தல்.
- நீர்வழிப் பாதைகளைப் பராமரிப்பதன் தேவையை உணர்ந்துகொள்ளும் திறன் பெறுதல்.
- திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் இலக்கணமறிந்து பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## பாடப்பகுதிகள்

- பெருமழைக்காலம்
- பிறகொரு நாள் கோடை - **அய்யப்ப மாதவன்**
- நெடுநல்வாடை - **நக்கீரர்**
- முதல்கல் - **உத்தமசோழன்**
- நால்வகைப் பொருத்தங்கள்

அ.மா.தே. 23



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



உரைநடை உலகம்

இயற்கை 2

# பெருமழைக்காலம்

8HG7HF

## நுழையும் முன்

❖ உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையான மழை, உழவுக்கும் இன்றியமையாதது. பருவம் தவறாது பொழிந்த மழை, பருவம் தப்பியும் சில நேரங்களில் பொய்த்தும் போகிறது. இயற்கைச் சமநிலையை நாம் சீர்குலைத்ததன் விளைவே பருவநிலை மாற்றம். சரியான திட்டமிடலின்றி உருவாக்கப்படும் பெருநகர அமைப்பு, நீர் மேலாண்மையில் கவனம் செலுத்தாமை இவற்றால் மழைக்காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இத்தகு சிந்தனைகளை முன்வைக்கின்றது இக்கலந்துரையாடல்.......

## தெரியுமா?

**புயலுக்குப் பெயர்:**

❖ சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. அதன்படி வங்கக்கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்கும் பெயர் வைக்க இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டு பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கின்றன. அந்தப் பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

## தெரியுமா?

**மழையைக் கணிக்கும் அறிகுறிகள்:**

❖ குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குறிப்பிடும், மழையைக் கணிக்கும் அறிகுறிகள்:

❖ கார்மேகங்கள்,சூரிய உதயத்திற்கு 15, 20 நிமிடங்களுக்கு முன்னதாகக் கிழக்கு வானத்தில் தோன்றுதல், செம்மை நிற மேகங்கள், திடீர்ப் புயல், காற்றின் திசை, இடி, மின்னல், பலமான காற்று, வானவில், முட்டைகளைச் சுமந்திருக்கும் எறும்புகள், பறக்கும் பருந்து, சூரியனைச் சுற்றி ஒளிவட்டம், வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை, தூசுப் பனிமூட்டம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **வெள்ளச் சமவெளிகள் அழிய காரணம்**

(அ) பருவநிலை மாற்றம் (ஆ) மணல் அள்ளுதல்

(இ) பாறைகள் இல்லாமை (ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

**விடை: (ஆ) மணல் அள்ளுதல்**

2. **உலக நாடுகள், மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே, புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும்- இத்தொடர் உணர்த்துவது.** PTA

(அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது (ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகின்றன

(இ) காலநிலை மாறுபடுகிறது (ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

**விடை: (அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

### குறுவினா

1. **"ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**
   - ❖ மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.
   - ❖ மரம் நிழல் தரும் மரம். காய்கனி தரும்.
   - ❖ மரம் மழைக்கு ஆதாரமாக விளங்கும்.
   - ❖ மரம் மண்ணரிப்பைத் தடுக்கும்.
   - ❖ மரம் தூய காற்றைக் கொடுக்கும்.
   - ❖ மரத்தால் உயிர் காக்கப்படும்.

2. **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.** அ.மா.தே. 23
   - ❖ மனிதன், தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
   - ❖ அவன், அதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

### சிறுவினாக்கள்

1. **மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறிப்பிடுக.** PTA
   - ❖ வெள்ளநீர் நிரம்பவும், வழியும் நீர் பெருகவும் உள்ள நீர் வழிகளான கால்வாய், ஆறு, ஓடைகளை மண் மேடிடாமல் பராமரிக்க வேண்டும். வெள்ளச் சமவெளிகளையோ, நீர்வழிப் பாதைகளையோ ஆக்கிரமித்துக் குடியிருப்புகளையோ, தொழிற்சாலைகளையோ கட்டுதல் கூடாது.
   - ❖ நீர் சேமிக்கும் இடங்களில் குப்பைக்கழிவு, நெகிழிப் பொருட்கள், தொழிற்சாலை திட, திரவக் கழிவுகள் முதலானவற்றைக் கொட்டுதல் கூடாது. நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்தப் பனை, வேம்பு முதலான நம் நாட்டு மரங்களை நடுதல் வேண்டும்.
   - ❖ நீர் நிலைகளைத் தூர்வார வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ள மக்களிடம் விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும்.
- தாழ்வான பகுதியில் வாழும் மக்களை மேடான பகுதிக்குச் செல்லச் செல்ல வேண்டும்.
- மழைக்காலங்களில் அரசு தீயணைப்புத்துறை, காவல் துறை, தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள், மருத்துவக் குழுக்கள் மற்றும் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

**2. பேரிடர் மேலாண்மை ஆணையம் -விளக்கம் தருக.** அ.மா.தே. 23 மார்ச் - 2020

- பேரிடர் மேலாண்மை ஆணையத்தை, நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு அமைத்தது.
- புயல், வெள்ளம்,நிலநடுக்கம், வறட்சி,சுனாமி ,ஆழிப்பேரலை, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான இயற்கைப் பேரிடர்கள் நிகழும் போது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துச் செயலாற்ற, இவ்வாணையம் வழிவகை செய்துள்ளது.
- அரசு தீயணைப்புத்துறை, காவல், தன்னார்வத் தொண்டு நிறுவனம் போன்ற பாதுகாப்பான அமைப்புகள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

## நெடுவினா

**1. "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசன் அவர்களுடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

மார்ச் - 2023 அ.மா.தே. 23 மார்ச் - 2020

**கலையரசன்:** ஐயா வணக்கம்.

**பசுமைதாசர்:** வணக்கம். தம்பி.

**கலையரசன்:** ஐயா நெகிழிப் பொருள் பயன்பாடு இன்றைய சூழலில் மக்களுக்கு இன்றியமையாதது ஆகிவிட்டது அன்றோ?

**பசுமைதாசர்:** உண்மைதான் தம்பி. அதே வேளையில் நெகிழிப் பொருள்களால் விளையும் கேடுகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவா? அவை மட்கி அழிவதே இல்லை.

**கலையரசன்:** நெகிழியை நாம் பயன்படுத்துவதால் ஏதேனும் ஆபத்து உள்ளதா?

**பசுமைதாசர்:** உண்டு. நாம் நெகிழியைப் பயன்படுத்தும்போதும், எரிக்கும்போதும் டையாக்சிஸ் என்ற நச்சு வாயு தோன்றி மனிதர்களுக்கு புற்றுநோயை உண்டாக்குகிறது. மண்ணில் நீர் செல்லும் பாதையை அடைக்கிறது .

**கலையரசன்:** ஆம் ஐயா, உண்மைதான். நீங்கள் சொல்லவும் எனக்கு நினைவுக்கு வருகிறது. எங்கள் தெருவில் சாக்கடை அடைத்துக்கொண்டது. அந்த அடைப்பை எடுத்தபோது அளவுக்கு அதிகமான நெகிழிப் பொருள்கள் இருந்தன.

**பசுமைதாசர்:** அதுமட்டுமா நெகிழிக்குப்பை, மழைத் தண்ணீரை மண்ணுக்குள் புகவிடுவதில்லை. ஆற்றுநீர் தன் போக்கில் பெருகாமல் தடுத்து, வெள்ளமாகக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் வழிந்தோட வைக்கிறது. வெள்ளம் எங்கு பெருகுகிறது என்பதை அறிய முடிவதில்லை. அது கடலைக்கூட விட்டு வைக்கப்படவில்லை. மீன் இனப்பெருக்கத்தைத்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



தடை செய்துவிடுகிறது. ஆடு, மாடு காட்டில் வாழும் உயிரினங்கள் கூட ,நெகிழியால் பாதிக்கப்படுவதைத் தெரிந்து கொள்.

**கலையரசன்:** சரிங்க ஐயா, நெகிழியை மறுசுழற்சி செய்ய முடியுமா?

**பசுமைதாசர்:** செய்யலாம். செய்தால் தொற்று நோய் ஏற்படும். அதனால், பயன்படுத்தக்கூடாது.

**கலையரசன்:** நெகிழி சார்ந்த எத்தனையோ பொருட்கள் உள்ளன. அவற்றைக் களைவதை, பயன்படுத்துவதை மக்கள் தவிர்க்க வேண்டும். இதற்கு விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்ய வேண்டும். நான் சொல்வது சரிதானே ஐயா?

**பசுமைதாசர்:** இதற்குத் தகுதியானவர்கள் பள்ளிப் பிள்ளைகள்தாம். இந்த வகையில் பள்ளிப் பிள்ளைகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நெகிழியால் மூடப்பட்ட பொருள்கள் சாக்லேட்முதல் அனைத்தையும்வாங்குவதை மாணவர்கள் தவிர்க்க வேண்டும். பயன்பாடு குறைந்தால், அது தானே மறைந்துவிடும். இந்த நெகிழி வந்தால் சணல், துணியால் செய்யப்பட்ட பை முதலான பொருட்கள் உற்பத்தி குறைந்து போனது. அவை மீண்டும் உருவெடுக்கும். தொழில்கள் பெருகும். தொல்லைகள் குறைந்து நன்மை விளையும்.

**கலையரசன்:** ஐயா! வேறு ஏதாவது மாற்று வழி உண்டா?

**பசுமைதாசர்:** உண்டு தம்பி. கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த ஒருவர் சுற்றுச்சூழலுக்கு கேடு தராத ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

**கலையரசன்:** அப்போ அதைப்பற்றி சொல்லுங்கள் ஐயா

**பசுமைதாசர்:** சொல்கிறேன் தம்பி. உருளை, மரவள்ளிக் கிழங்கு இதில் கிடைக்கும் மாவுகளிலிருந்தும், தாவர எண்ணெய் கழிவுப் பொருட்களிலிருந்தும் "என்விகிரீன் பைகள்" கண்டுபிடித்துள்ளனர்.

**கலையரசன்:** இது மட்டுமா?

**பசுமைதாசர்:** 180 நாட்களில் மட்கிவிடும். நீரில் மூழ்கினாலும் கரைந்துவிடும்.

**கலையரசன்:** நன்றி ஐயா! மிக அழகாகக் கூறினீர்கள். மிக்க நன்றி.

**நெகிழியை எரிக்காதே!**

**புற்றுநோயை ஏற்காதே!**

2. **புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரிய மேலாளருக்குக் கடிதம் எழுதுக.** PTA

அனுப்புநர்
ஊர்ப் பொதுமக்கள்,
10, சந்தைப்பேட்டைதெரு,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர்.

பெறுநர்
மேலாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் .



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



ஐயா

பொருள்: மின் இணைப்புகளை சரி செய்ய வேண்டுதல் சார்பு.

வணக்கம். எங்கள் பகுதியில் சுமார் 400 குடியிருப்புகள் உள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட புயலின் தாக்கத்தால் எங்களுடைய குடியிருப்புகளையே புரட்டிப் போட்டுள்ளது. வாழ்நாளில் காணமுடியாத அளவிற்கு சீரழிவைக் கண்டுள்ளோம். சூறாவளியாய் புறப்பட்ட புயல், சாலைகளையும் வீடுகளையும் சின்னாபின்னமாக்கியது. வீட்டுப் பொருட்களை எல்லாம் அடித்து நொறுக்கியது. மரங்களும் மின்கம்பங்களும் அடியோடு சாய்ந்தன. மனிதர்களும் செடி, கொடிகளும் விலங்குகளும் தப்பவில்லை .இவற்றில் மின்விளக்கு வசதி இல்லாததால் எங்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. வயதானவர்கள், குழந்தைகள், பள்ளி செல்லும் மாணவர்கள் மிகவும் துன்பத்திற்கு ஆட்பட்டு உள்ளனர். எனவே, மிக விரைவில் போர்க்கால அடிப்படையில், நடவடிக்கை எடுத்து அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சீர்செய்து தரும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இடம்: சந்தைப்பேட்டைத் தெரு
நாள் :10. 08.2023

இப்படிக்கு,
ஊர்ப் பொதுமக்கள்.
அன்பரசன்- தலைவன்.
ஆறுமுகம் -உப தலைவர்.
முருகன் -செயலர்.
மருதன்- பொருளர்.

உறைமேல் முகவரி:
பெறுநர்
மேலாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஆண்டுதோறும் உலகப் புவிநாள் கொண்டாடப்படுவது________**
   (அ) ஏப்ரல் 22 (இ) நவம்பர் 30
   (ஆ) நவம்பர் 7 (ஈ) மே 15 **விடை: (அ) ஏப்ரல் 22**
2. **"மாமழை போற்றுதும்"-என்ற பாடல் வரியைப் பாடியவர்________**
   (அ) திருவள்ளுவர் (இ) ஔவையார்
   (ஆ) கம்பர் (ஈ) இளங்கோவடிகள் **விடை: (ஈ) இளங்கோவடிகள்**
3. **புயல், பெருமழை, பெருவெள்ளம் ஏற்படக் காரணம்________**
   (அ) பெருநகர அமைப்பு இல்லை (இ) சரியான திட்டமிடல் இன்மை
   (ஆ) இயற்கை, சமநிலை இழத்தல் (ஈ) மேலாண்மைத் துறையின் கவனக்குறைவு
   **விடை: (ஆ) இயற்கை, சமநிலை இழத்தல்**
4. **நம் நாட்டில் கடந்த 15 ஆண்டுகளில் எத்தனை முறை வறட்சி ஏற்பட்டுள்ளது?**
   (அ) நான்கு (இ) மூன்று



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



(ஆ) ஆறு (ஈ) ஐந்து **விடை: (ஈ) ஐந்து**

5. **புவி, வெப்பம் அடைவதற்கு அடிப்படை________**

(அ) இயற்கை நிகழ்வு (இ) பருவநிலை மாற்றம்

(ஆ) அறிவியல் மாற்றம் (ஈ) இயற்கையைச் சேதப்படுத்தியமை

**விடை: (ஈ) இயற்கையைச் சேதப்படுத்தியமை**

6. **"ஒக்கி" என்பதன் தமிழ்ச்சொல்________**

(அ) வாயு (இ) காற்று

(ஆ) கண் (ஈ) வாய் **விடை: (ஆ) கண்**

7. **"புவி வெப்பமடைதல், மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று கூறியவர்________**

(அ) வில்லியம் மேவல் (இ) லிட்டில் வுட்

(ஆ) டேவிட் கிங் (ஈ) ஈ.டி. பெல் **விடை: (ஆ) டேவிட் கிங்**

8. **நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்க வைப்பதில் ________ பங்கு இன்றியமையாதது.**

அ) கிணறு இ) மணல்

ஆ) ஊற்று ஈ) பாறை **விடை: இ) மணல்**

9. **முறையற்ற காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துவது________**

அ) ஆக்சிஜன் இ) கார்பன் டை ஆக்சைடு.

ஆ) ஹைட்ரஜன் ஈ) சூரிய அடுப்புகள் **விடை: இ) கார்பன் டை ஆக்சைடு**

10. **ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் எங்குள்ளது?**

அ) டெல்லி இ) மும்பை

ஆ) குஜராத் ஈ) கொல்கத்தா **விடை: ஆ) குஜராத்**

11. **காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையில் உள்ள நாடுகள்________**

அ) 173 இ) 193

ஆ) 183 ஈ) 147 **விடை: இ) 193**

12. **கூற்று ஒன்று: இயற்கையானது சமநிலையோடு இருந்தால்தான், அந்தந்தப் பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் நடக்கும்.**

**கூற்று இரண்டு : உபரிநீர் கால்வாய்களும் வெள்ளச் சமவெளிகளும் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அற்றவை.**

அ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி

ஆ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ) கூற்று1 சரி 2 தவறு**

13. **பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.**

1) **உயிரினங்கள் அனைத்தும், ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன.**

2) **சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனமே, புயல்களுக்குப் பெயர் வைக்கிறது. மேற்கூறியவற்றில் சரியான கூற்றைக் கண்டறிக.**

அ) ஒன்று மட்டும் சரி இ) இரண்டும் சரி

ஆ) இரண்டு மட்டும் சரி ஈ) இரண்டும் தவறு **விடை: இ) இரண்டும் சரி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**14. கூற்று 1: வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் அமைப்புகளை அழித்து குடியிருப்புகள்,தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களை மனிதன் அமைத்துள்ளான்.**

**கூற்று 2: மணல் அள்ளியதன் விளைவாக வெள்ளச் சமவெளிகள் அழிகின்றன.**

அ) கூற்று1 தவறு, 2 சரி இ) கூற்று 1சரி 2 தவறு

ஆ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ) கூற்று இரண்டும் சரி**

**15. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.**

**1. பேரிடரால் வேளாண் தொழில், இழப்புகளைச் சந்திக்கிறது.**

**2. பேரிடர் நிகழும்போது மேலாண்மை ஆணையம் மட்டுமே உதவுகிறது.**

**மேற்கூறியவற்றில் தவறான கூற்றைக் கண்டறிக.**

அ) ஒன்று மட்டும் தவறு இ) இரண்டும் தவறு

ஆ) இரண்டு மட்டும் தவறு ஈ) இரண்டும் சரி **விடை: ஆ) இரண்டு மட்டும் தவறு**

**16. பொருத்துக:**

அ) ஹைட்ரஜன் ஆண்டு - 1) மிகவும் வெப்பமான ஆண்டு

ஆ) ரஷ்யா - 2) கார்பன் அற்ற ஆற்றல்

இ) 2009 ஆம் ஆண்டு - 3) தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம்

ஈ) 2005 டிசம்பர் 23 - - 4) பசுமைக் குடில் வாயு

அ) 2, 3, 4, 1 இ) 3, 1, 2, 4

ஆ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 1, 4 **விடை: ஆ) 2, 4, 1, 3**

**17. ஆண்டுதோறும் உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாடப்படுவது________**

அ) ஜூன் 5 இ) ஆகஸ்ட் 26

ஆ) ஜூலை 15 ஈ) நவம்பர் 14 **விடை: அ) ஜூன் 5**

**18. மாற்று ஆற்றல்களாக விளங்கக் கூடியவற்றைக் கண்டறிக.**

1) சூரிய ஆற்றல்

2) காற்று ஆற்றல்

3) ஹைட்ரஜன் ஆற்றல்

4) தாவர ஆற்றல்

அ) ஒன்றும் இரண்டும் சரி இ) மூன்று மட்டும் தவறு

ஆ) மூன்றும் நான்கும் சரி ஈ) நான்கும் சரி **விடை: ஈ) நான்கும் சரி**

**19. புயலைக் குறித்த பெயர்களைப் பரிந்துரை செய்துள்ள சார்க் அமைப்பிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை________** அ.மா.தே. 23

அ) 8 இ) 64

ஆ) 4 ஈ) 7 **விடை: அ) 8**

**20. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது ................**

அ) புயல் அபாயக் குறியீடுகள் இ) எச்சரிக்கைக் குறியீடுகள்

ஆ) உத்தரவுக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள். **விடை: அ) புயல் அபாயக்குறியீடுகள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறு வினாக்கள்

**1. சார்க் அமைப்பில் இருக்கும் நாடுகள் யாவை?**

- இந்தியா
- இலங்கை
- மாலத்தீவு
- ஓமன்
- பாகிஸ்தான்
- வங்கதேசம்
- மியான்மர்
- தாய்லாந்து

**2. தமிழ்ச் சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது?**

- தமிழ்ச் சமூகம் மழையை, "மாமழை போற்றுதும்" என்றும், "நீரின்றி அமையாது உலகு" என்றும், "மாரியல்லது காரியமில்லை" என்றும் கொண்டாடியது.

**3. பெருமழையைத் தாங்க இயற்கைத் தந்த அமைப்புகள் யாவை?**

- குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்றவையே பெருமழையைத் தாங்க இயற்கை தந்த அமைப்புகளாகும்.

**4. நம் நிலத்தையும் வாழ்வின் அடிப்படைகளையும் பாதித்த பெரும் புயல்கள் யாவை?**

- நிஷா,தானே, வர்தா, ஒக்கி, கஜா முதலான பெரும்புயல்கள், நம் நிலத்தையும் வாழ்வின் அடிப்படைகளையும் பாதித்தன.

**5. இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

- மழைப் பொழிவினால் தாவரங்கள் வளருகின்றன.
- மனிதன் தாவரங்களையும், விலங்குகளையும் உண்கின்றான்.
- ஆடு, மாடு தாவரங்களை உண்ணுகின்றன.
- புலி, சிங்கம் ஆடு மாடுகளை உண்ணுகின்றன.
- இவற்றை ஊன் உண்ணிகள் என்கின்றோம். இவ்வாறு ஒன்றையொன்று சார்ந்து வாழும் இயற்கைச் சுழற்சியே இயற்கைச் சமநிலை என்பர்.

**6. இயற்கையில் மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கக் காரணம் என்ன?**

- இயற்கையானது சமநிலையை இழக்கும் போது, இயல்பான பருவ நிலைகளில் மாற்றம் ஏற்படுகிறது.
- புயல், பெருமழை, பெரு வெள்ளம் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன.

**7. பசுமைக்குடில் வாயுக்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?**

- கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றைப் பசுமைக்குடில் வாயுக்கள் என அழைக்கின்றோம்.

**8. புவி வெப்பம் அடைவது எதனால் நேர்கிறது?**

- மனிதனின் பேராசை காரணமாக, இயற்கை வளங்கள் கடுமையாகச் சேதம் அடைகின்றன.
- "புவி வெப்பமடைதல், மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று, இங்கிலாந்து அறிவியலாளர் டேவிட்கிங், திட்டவட்டமாகக் கூறுவதனால் தெளியலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**9. வெள்ளச் சமவெளி என்றால் என்ன?**

❖ வெள்ளச் சமவெளி என்பது, ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண் ஆகும்.

**10. ஆற்றங்கரைப் படிவு என்றால் என்ன?**

❖ ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு வரும் காலங்களில், அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்து விடுவது ஆற்றங்கரைப் படிவு என்பர்.

## சிறு வினாக்கள்

**1. வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணம் என்ன?**

❖ நீர்வழிப் பாதைகளில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புகளும், திடக்கழிவுகளைக் கொட்டுதலும் வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணம்.

❖ அத்துடன், ஆற்றில் பாறைகள் தெரியும் அளவிற்கு மணல் அள்ளியதன் விளைவாகச் சமவெளிகள் அழிந்தன. இதற்கு மணல் அள்ளுவதும் ஒரு முக்கியக் காரணமாகும். சுமார் 40 ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85 விழுக்காடு, வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டவையே ஆகும்.

**2. பேரிடர் வந்துவிட்டால் மேற்கொள்ள வேண்டியவை யாவை?**

❖ வதந்திகளை நம்பவோ, பிறரிடம் பரப்பவோ கூடாது.

❖ பதற்றம் அடைதலை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

❖ வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை தொடர்பான தகவல்களின் அடிப்படையில், செயல்பட வேண்டும்.

❖ அரசு, தீயணைப்புத்துறை, காவல்துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் செயல்பட வேண்டும்.

❖ பாதுகாப்பு மையங்களையும் மருத்துவக் குழுக்களையும் அருகிலேயே தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**3. நீர்நிலைகளில் உள்ள மணலை எடுப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

❖ நீர்நிலைகளில் உள்ள மணலை அளவு கடந்து எடுப்பதால், நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது.

❖ ஏரி, குளங்கள் காணாமல் போகின்றன. விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன.

❖ வேளாண்மைத் தொழில், இழப்புக்களைச் சந்திக்க நேரிடுகிறது.

❖ நீரோட்டத்தடையால், ஏராளமான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



கவிதைப்பேழை

இயற்கை ௨

# பிறகொரு நாள் கோடை

–அய்யப்ப மாதவன்

8WZ2IR

## நுழையும் முன்

❖ மாறுபட்ட இரண்டு இணைகிறபோது புது அழகு புலப்படுகிறது. பகலும் இரவும் சந்திக்கும் அந்தி அழகு. கரையும் கடலும் சேரும் ஓரம் அழகு. மழையினூடே வெயில் வரும் வேளை வெளிப்படும் அழகுகள் பார்க்கத் திகட்டாதவை. நீரில் நனைந்து வெயிலில் காயும் நகரத்தில் பளபளக்கும் மரக்கிளைகள் சொட்டும் நீர்த்துளிகளும் வெயில் கண்டு மகிழ்ந்த பறவைகளின் இசைப்பும் நெஞ்சில் தடமாய் வழிகின்றன. வெயில் கண்டு மகிழ்ந்தாலும் மீண்டும் மழைக்காக நெஞ்சம் ஏங்கத்தான் செய்கிறது.

## நூல் வெளி

❖ "அய்யப்ப மாதவன் கவிதைகள்" என்னும் தொகுப்பிலிருந்து இக்கவிதை எடுக்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவர் கவிஞர் அய்யப்ப மாதவன். இதழியல் துறை, திரைத்துறை சார்ந்து இயங்கி வருபவர் "இன்று" என்ற கவிதைக் குறும்படத்தையும் மழைக்குப் பிறக்கும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி முதலான கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## இலக்கணக் குறிப்பு

இருந்த, அழிந்த, தீட்டிய, இறங்கிய, வாங்கிய, கண்ட - பெயரெச்சங்கள்

நனைந்து, குவித்து, அசைத்து, ஏந்தி - வினையெச்சங்கள்

## உறுப்பிலக்கணம்

1. **அசைத்து = அசை + த் + த் + உ**
   - ❖ அசை - பகுதி
   - ❖ த் - சந்தி
   - ❖ த் - இறந்த கால இடைநிலை
   - ❖ உ - வினையெச்ச விகுதி
2. **இறங்கிய = இறங்கு + இ(ன்) + ய் + அ**
   - ❖ இறங்கு - பகுதி
   - ❖ இ(ன்) - இறந்த கால இடைநிலை, (புணர்ந்து கெட்டது)
   - ❖ ய் - உடம்படுமெய்
   - ❖ அ - பெயரெச்ச விகுதி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. அலைகிறேன் = அலை + கிறு + ஏன்**

- அலை - பகுதி
- கிறு - நிகழ்கால இடைநிலை
- ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

**1. தலையசைத்து = தலை + அசைத்து**

**விதி :** "உயிர்வரின் இ ஈ ஐ வழி யவ்வும்" - தலை + ய் + அசைத்து.

"உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" - தலையசைத்து.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது" என்று கவிஞர் அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது .........**

அ) சூரிய ஒளிக்கதிர் இ) மழைத்துளிகள் ஆக - 2021 ஜூலை -22 அ.மா.தே. 23

ஆ) மழைக் காலம் ஈ) நீர்நிலைகள் **விடை: இ) மழைத்துளிகள்**

### குறு வினாக்கள்

**1. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகியது"-- விளக்கம் தருக.** ஆக - 2021 மே - 2022 மார்ச் - 2023 ஜூலை -22

- பெய்த மழையால், நகர மாசுகள் அகற்றப்பட்டன.
- மழைக்காலமாயினும் திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், புதுப்பொலிவு பெறுகிறது.
- இதனை, "நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய், விளங்குகிறது என்கிறார்" கவிஞர் அய்யப்ப மாதவன்.

### சிறு வினாக்கள்

**1. "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்" --இக்கவிதையின் அடி, "தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

- "தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோன்"- இப்பாடல் அடிகள் ஏற்றம் இறைப்பவர்கள் அலுப்புத் தெரியாமல் இருக்கப் பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று.
- விடியற்காலையில் மூங்கில் இலை நுனியில் ஒரு சொட்டு பனிநீர் வைரம் வைத்தது போல் இருக்கும். சூரியனின் ஒளிக்கதிர்கள் அந்த ஒருதுளி நீரையும் விட்டு வைக்காமல் தானே எடுத்துக் கொள்ளும். இதைத்தான், "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் அதாவது, நீர்நிலைகளை வந்தடையும் மழை நீரைச் சூரியன் தன் ஒளிக்கதிர் என்ற உதடுகளால் உறிஞ்சுகிறான் என்று கூறுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது_______**

அ) வெளிச்சம் இ) மரங்கள்

ஆ) நீர்நிலை ஈ) நகரம் **விடை: ஈ) நகரம்**

2. **நீர்நிலையிலிருந்து ஒளிக்கதிர் நீரை எப்படி எடுத்துக்கொண்டது?**

அ) கரங்களால் பருகி இ) உதடுகள் குவித்து

ஆ) நீரில் மூழ்கி ஈ) குவளையில் பிடித்து **விடை : இ) உதடுகள் குவித்து**

3. **உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைப்பவை_______**

அ) மரங்கள் இ) நரம்புகள்

ஆ) நீர்ச்சுவடுகள் ஈ) பறவைகள் **விடை: ஈ) பறவைகள்**

4. **பார்க்கத் தெவிட்டாத அழகு_______**

அ) வெயில் காயும் நகரம் இ) வெயில் கண்டு மகிழ்ந்த பறவை

ஆ) பளபளக்கும் மரக்கிளை ஈ) மழையூடே வெயில் வரும் வேளை

**விடை: ஈ) மழையூடே வெயில் வரும் வேளை**

5. **கூற்று சரியா? தவறா?**

**கூற்று 1: மிதமான சொட்டுகளை ஈரமான மரங்கள் தலையசைத்து உதறுகிறது.**

**கூற்று 2: வெயில் கண்ட பறவைகள் வெயில் தாங்காமல் வீழ்கின்றன.**

அ) கூற்று இரண்டும் தவறு இ) கூற்று 1 சரி 2 தவறு

ஆ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: இ) கூற்று 1 சரி 2 தவறு**

6. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காய்கிறது நனைந்திருந்த வெளிச்சம்

ஆ) நகரம் பட்டை தீட்டி வெள்ளை வைரமாகிறது

இ) வெயில் கண்ட பறவைகள், உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன

ஈ) ஈரமான மரங்கள் மீதமான சொட்டுகளைத் தலையசைத்து உதறுகிறது.

**விடை: ஈ) ஈரமான மரங்கள் மீதமான சொட்டுகளைத் தலையசைத்து உதறுகிறது**

7. **பொருந்தாததைத் தேர்க.**

| | | |
|---|---|---|
| அ) மரங்கள் | - | 1) தலையசைத்து உதறுகிறது |
| ஆ) பறவைகள் | - | 2) சங்கீதம் இசைத்தன |
| இ) சுவர் | - | 3) நீர்ச்சுவடுகள் அழித்தன |
| ஈ) நரம்புகள் | - | 4) மத்தளம் இசைத்தன |

**விடை: ஈ) நரம்புகள் - 4) மத்தளம் இசைத்தன**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**8. ”போன மழை திரும்பவும் வருமென்று மேகங்களை வெறுத்துக் கொண்டு அலைகிறேன்” என்று பாடியவர்________**

அ) அய்யப்ப மாதவன் இ) வேணுகோபாலன்

ஆ) இரா .மீனாட்சி ஈ) ஆத்மாநாம் **விடை: அ) அய்யப்ப மாதவன்**

**9. "பிறகொருநாள் கோடை" என்னும் கவிதை எடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்பு________**

அ) மழைக்குப் பிறகு மழை இ) நீர் வெளி

ஆ) நானென்பது வேறொருவன் ஈ) அய்யப்ப மாதவன் கவிதைகள்

**விடை: ஈ) அய்யப்ப மாதவன் கவிதைகள்**

## குறுவினாக்கள்

**1. ஒலிக்கதிர் எதனை உறிஞ்சுகிறது?**

❖ ஒளிக்கதிர், உதடுகளைக் குவித்து நீர்நிலைகளிலிருந்து மழை பெய்ததால், தேங்கிய நீரை உறிஞ்சுகிறது.

**2. ஈரமான மரங்கள் எதனை, எவ்வாறு உதறுகின்றன?**

❖ மழை பெய்ததால் ஈரமான மரங்கள், இலைகளில் ஒட்டிய, மீதமான சொட்டுகளைத் தலை அசைத்து உதறுகின்றன.

**3. வெயில் கண்ட பறவைகள் செயல் யாது ?**

❖ மழை பெய்தபின் வெயில் கண்ட பறவைகள், உற்சாகம் பீறிடச் சங்கீதம் இசைக்கின்றன.

**4. பார்க்கத் திகட்டாத அழகுகள் எவை ?**

❖ பகலும் இரவும் சந்திக்கும் அந்தி, கரையும் கடலும் சேரும் ஓரம், மழையினூடே வெயில் வரும்வேளை ஆகிய அழகுகள், பார்க்கத் திகட்டாதவை.

**5. நெஞ்சில் தடமாய் வழிபவை எவை?**

❖ நீரில் நனைந்து வெயிலில் காயும் நகரத்தின் பளபளப்பு, மரக்கிளைகள் சொட்டும் நீர்த்துளிகள், வெயில் கண்டு மகிழ்ந்த பறவைகளின் இசைப்பு ஆகியன, நெஞ்சில் தடமாய் வழிகின்றன.

**6. எப்போது புது அழகு புலப்படுகின்றது?**

❖ மாறுபட்ட இரண்டு இணைகின்றபொழுது புது அழகு புலப்படுகின்றது.

**சான்று:**

❖ பகலும் இரவும் சந்திக்கும் அழகு.

❖ கடலும் கரையும் சேரும் அழகு.

## சிறுவினா

**1. கவிஞர் அய்யப்ப மாதவன் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்:** | அய்யப்ப மாதவன் |
| **ஊர்:** | சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டை |
| **பணி:** | திரைத்துறை சார்ந்த இதழியல் துறை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



| | |
|---|---|
| **இயற்றிய நூல்கள்:** | மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி, அய்யப்பமாதவன் கவிதைகள் |
| **வெளியீடு:** | இன்று என்னும் கவிதைக் குறும்படத்தை வெளியிட்டுள்ளார். |

## நெடுவினா

1. **"பிறகொருநாள் கோடை" பாடலில் கவிஞர் அய்யப்ப மாதவன் கூறியுள்ள செய்திகளை எழுதுக.**

- மழைக்காலத்தில் சூரியன் திடீர்ப்பயணம் மேற்கொண்டது. அதனால், இதுவரை நனைந்திருந்த வெளிச்சம், காயத் தொடங்கி நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகப் பளபளத்தது.
- சூரியன், தன் ஒளிக்கதிர்களாகிய உதடுகளைக் குவித்து, நீர் நிலைகளில் தண்ணீரை உறிஞ்சுகிறது. சுவர் எங்கும் வழிந்திருந்த நீர்ச்சுவடுகள் மாயமாய் அழிந்ததால், வருத்தம் வெளிப்படுகிறது. ஈரமாக இருந்த மரங்களோ, தங்கள் மீது ஒட்டி இருந்த நீர்த் துளிகளைத் தலை அசைத்து உதறுகின்றன.
- வெயிலைக் கண்டதால் பறவைகள், உற்சாகம் பீறிட்டு சங்கீதம் இசைக்கின்றன. அந்த ஊர் மழைக் கனவிலிருந்து விடுபட்டு விழித்தெழுகிறது.
- வீட்டுச் சுவரில் செங்குத்தாக இறங்கிய மழை நீரை இதயத்தில் வழிய விட்டுக் கொண்டிருந்தபோது, மழை பெய்த போது கையேந்தி வாங்கிய துளிகள், நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது. போனமழை திரும்புமா என்ற ஏக்கம், மேகங்களை வெறித்து நோக்கியபடி அலையவிடுகிறது. ஆனால், பிறிதொருநாளில் வந்ததோ கோடைக்காலம். ஆம் "பிறிதொரு நாள் கோடை" காலம்.

கவிதைப்பேழை

இயற்கை உ

## நெடுநல்வாடை

– *நக்கீரர்*

9CHWK3

## நுழையும் முன்

- "ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை" என்பது சொலவடை, ஓர் ஆண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர். பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை, மாற்றம் பெறுகிறது . முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

## நூல்வெளி

- பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. 188 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இப்பாடலின் பெயர் இரு வகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுதியால் நெடுவாடையாகவும் போர்ப்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



பாசறையில் இருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| அ) குரங்குகள் | - | 1) கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) விலங்குகள | - | 2) மேய்ச்சலை மறந்தன |
| இ) பறவைகள் | - | 3) குளிரால் நடுங்கின |
| ஈ) பசுக்கள் | - | 4) மரங்களிலிருந்து வீழ்ந்தன |

அ) 1, 3, 4, 2 இ) 3, 2, 1, 4
ஆ) 3, 1, 4, 2 ஈ) 2, 1, 3, 4 **விடை: ஆ) 3,1, 4, 2**

2. "**பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென" தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு ......... மார்ச் - 2020

அ) வினைத்தொகை இ) இடைச்சொல் தொடர்
ஆ) உரிச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விடை: ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

### குறுவினா

1. **இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.** PTA

❖ இனநிரை = இனம் + நிரை. "மவ்ஈறு ஒற்று அழிந்து, உயிர்ஈறு ஒப்பவும் ஆகும்"-- என்ற விதிப்படி இன + நிரை = இனநிரை எனப் புணர்ந்தது.

### சிறுவினா

1. **வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?** மார்ச் - 2023 அ.மா.தே. 23

❖ வாடைக்காலத்தில் மேகம் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழை பெய்தது.
❖ தாழ்வான பகுதியில் வெள்ளம் பெருகியது.
❖ தம் நிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
❖ அவர்கள் சூடியிருந்த காந்தள் மலர் மாலைகள் கசங்கின.
❖ ஆயர் பலர் சேர்ந்து, கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.
❖ தண்ணீர் தாழ்வான பகுதியில் நிரம்பி விடும் என்பதால் பாதுகாப்பிற்காக மேடான பகுதிக்குச் சென்றனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நெடுவினா

1. **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.** PTA

**முன்னுரை:**

❖ ஐப்பசி மாதம் அடைமழைக் காலம் என்பார்கள். பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களை கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர். பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை மாற்றம் பெறுவதை முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழை குளிரால் ஏற்படும் தாக்கத்தினை நெடுநல்வாடை வருணனை செய்கிறது.

**புதுப்பெயல்:**

❖ மேகம் தான் தாங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்தது. உலகம் குளிரும்படியாக மழை பொழிந்தது. மழை வெள்ளம் தாழ்வான பகுதியை நோக்கிச் சென்றது. வெள்ளத்தை வெறுத்த மக்கள், வளைந்த கோலையுடைய ஆயர்கள் தம் நிரைகளை மேடான பகுதியில் மேயவிட்டனர்.

**வாழ்வில் மாற்றம்:**

❖ புதுப்பெயலால் ஆயர் இன மக்கள் தங்கியிருந்த நிலப்பரப்பில் நீர் சூழ்ந்தது. தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், தம் ஆநிரைகளோடு மேடான நிலங்களைத் தேடினர். அவற்றைக் காப்பதற்கும் மேய விடுவதற்கும் தாம் முன்னர் வாழ்ந்த நீர்ப்பகுதியிலிருந்து புலம்பெயர நேர்ந்தது.

**வாடைக்கால வாழ்வு:**

❖ ஆயர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின.

❖ ஆயர்பலர் ஒன்று சேர்ந்து, கொள்ளி நெருப்புக் கொண்டு கைகளுக்குச் சூடு ஏற்றினர்.

❖ விலங்கினங்கள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

❖ பறவைகள் தங்கி இருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன.

❖ பசுக்களோ, தன் கன்றுகளுக்குப் பாலூட்ட மறந்தன.

**முடிவுரை:**

❖ முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையாலும் குளிராலும் ஏற்படும் மாற்றத்தை சங்க இலக்கிய நூலான நெடுநல்வாடையில் நக்கீரர் மிக அழகுபடக் கூறியுள்ளார்.

## இலக்கணக்குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வளைஇ | - | சொல்லிசை அளபெடை PTA | புதுப்பெயல் | - | பண்புத்தொகை |
| பொய்யா | - | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | கொடுங்கோல் | - | பண்புத்தொகை |

## உறுப்பிலக்கணம்

1. **கலங்கி = கலங்கு + இ**

❖ கலங்கு - பகுதி

❖ இ - வினையெச்ச விகுதி

2. **படிவன = படி + வ் + அன் + அ**

❖ படி - பகுதி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- வ் - எதிர்கால இடைநிலை
- அன் - சாரியை
- அ - வினையெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

1. **இனநிரை = இனம் + நிரை**
   - "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்" என்ற விதிப்படி (இனம்+ நிரை) "இனநிரை" என்று புணர்ந்தது.
2. **புதுப்பெயல் = புதுமை + பெயல்** **PTA**
   - "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "புதுப்பெயல்" எனப் புணர்ந்தது.
3. **கொடுங்கோல் = கொடுமை + கோல்**
   - "ஈறுபோதல்" என்ற விதிப்படி - கொடு + கோல்
   - "இனமிகல்" என்ற விதிப்படி "க"கரத்திற்கு இனமான(க்) "ங"கரம்(ங்) தோன்றி "கொடுங்கோல்" எனப் புணர்ந்தது.
4. **பெரும்பணி = பெருமை + பணி**
   - "ஈறுபோதல்" என்ற விதிப்படி -- பெரு + பணி
   - "இனமிகல்" என்ற விதிப்படி "ப" கரத்திற்கு(ப்) இனமான மகரம் (ம்) தோன்றி "பெரும்பணி" எனப்புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"ஆர்கலி" என்ற சொல்லின் பொருள் ________**

   அ) சூரியன் இ) கடல்

   ஆ) வெள்ளம் ஈ) நிலா **விடை: ஆ) வெள்ளம்**

2. **"கலங்கி" என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணம் பிரிப்பு முறை ________**

   அ) கல + ங் + கி இ) கலங்கு + இ

   ஆ) கலங் + கி ஈ) கலங்கி + இ **விடை: இ) கலங்கு + இ**

3. **போர்மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீடு________**

   அ) கடவை இ) கூதிர்ப்பாசறை

   ஆ) சிவிரம் ஈ) வீடாரம் **விடை: இ) கூதிர்ப்பாசறை**

4. **"வளைஇ" என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு________**

   அ) மரூஉ இ) இசைநிறை அளபெடை

   ஆ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை **விடை: ஆ) சொல்லிசை அளபெடை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**5. வெற்றியின் அடையாளமாகச் சூடுவது ________**

அ) காந்தல் பூ இ) வஞ்சிப் பூ

ஆ) கரந்தைப் பூ ஈ) வாகைப் பூ **விடை: ஈ) வாகைப் பூ**

**6. கூதிர்ப் பருவம் என்பது ________**

அ) ஐப்பசி, புரட்டாசி இ) புரட்டாசி, கார்த்திகை

ஆ) கார்த்திகை, மார்கழி ஈ) ஐப்பசி, கார்த்திகை **விடை: ஈ) ஐப்பசி, கார்த்திகை**

**7. ஆயர்கள், தலையில் சூடியிருந்த________ மாலை கசங்கியது.**

அ) வாகை இ) மல்லிகை

ஆ) காந்தள் ஈ) முல்லை **விடை: ஆ) காந்தள்**

**8. குளிர் மிகுதியால் நடுங்கியவை________**

அ) விலங்குகள் இ) கன்றுகள்

ஆ) பறவைகள் ஈ) குரங்குகள் **விடை: ஈ) குரங்குகள்**

**9. கவுள் புடையூஉ நடுங்க--அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு________**

அ) உயிரளபெடை இ) சொல்லிசை அளபெடை

ஆ) இசைநிறை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை **விடை: ஈ) இன்னிசை அளபெடை**

**10. நெடுநல்வாடையை இயற்றியவர்________**

அ) கபிலர் இ) நக்கீரர்

ஆ) பரணர் ஈ) மோசிகீரனார் **விடை: இ) நக்கீரர்**

**11. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்________**

அ) சோழன் கரிகாலன் இ) பாண்டியன் நெடுஞ்செழியன்

ஆ) சேரன் செங்குட்டுவன் ஈ) பறம்புமலை பாரி **விடை: இ) பாண்டியன் நெடுஞ்செழியன்**

**12. நக்கீரரனின் தந்தை ________**

அ) மதுரைக் கணக்காயனார் இ) வெள்ளைக்கொடி நாகனார்

ஆ) மாங்குடி மருதனார் ஈ) இவர்களில் எவருமிலர் **விடை: அ) மதுரைக் கணக்காயனார்**

**13. நெடுநல்வாடை________ நூல்களுள் ஒன்று**

அ) எட்டுத்தொகை இ) பதினெண்கீழ்க்கணக்கு

ஆ) பத்துப்பாட்டு ஈ) நீதிநூல் **விடை: ஆ) பத்துப்பாட்டு**

**14. நெடுநல்வாடையில் அமைந்துள்ள பா________**

அ) வெண்பா இ) கலிப்பா

ஆ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா **விடை: ஆ) ஆசிரியப்பா**

**15. கண்ணி என்பது________**

அ) கழுத்தில் அணியும் மாலை இ) கையில் அணியும்அணிகலன்

ஆ) தலையில் சூடும் மாலை ஈ) காலில் அணியும் கழல்

**விடை: ஆ) தலையில் சூடும் மாலை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**16. "மா" என்பதன் பொருள்________**

அ) பறவை இ) வானம்

ஆ) விலங்கு ஈ) பூமி **விடை: ஆ) விலங்கு**

**17. நெடுநல்வாடை________ அடிகளைக் கொண்டது.** PTA

அ) 202 இ) 188

ஆ) 185 ஈ) 306 **விடை: இ) 188**

**18. பழந்தமிழர், ஓராண்டை________ பருவங்களாக வகைப்படுத்தினர்.** PTA

அ) 12 இ) 6

ஆ) 3 ஈ) 4 **விடை: இ) 6**

**19. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ________** PTA

அ) புறநானூறு இ) நெடுநல்வாடை

ஆ) அகநானூறு ஈ) நற்றிணை **விடை: இ) நெடுநல்வாடை**

## குறுவினாக்கள்

**1. நக்கீரர் குறிப்பு வரைக.**

- மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரர்
- அகநானூற்றில் 17 பாடல்கள், குறுந்தொகையில் 8 பாடல்கள், நற்றிணையில் 7 பாடல்கள், புறநானூற்றில் 3 பாடல்கள் பாடியுள்ளார்.
- இறையனார் களவியலுக்குச் சிறந்த உரை தந்தவர்.
- கபிலர், பரணர் காலத்தவர்.
- 188 அடிகளை உடைய "நெடுநல்வாடை" என்னும் நூலை இயற்றியவர்.

**2. "கொடுங்கோல் கோவலர்" விளக்குக.**

- "கோவலர்" என்பது ஆநிரைகளைப் பாதுகாக்கும் ஆயரைக் குறிப்பது.
- அவர்கள் தம் கையில் கோல் வைத்திருப்பர். அது வளைந்திருக்கும். அதனால், "கொடுங்கோல் கோவலர்" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**3. குளிரினைப் போக்க கோவலர்கள் என்ன செய்தார்கள்?**

- கோவலர்கள் பலரும் கூடிக் கொள்ளி நெருப்பினில் கைகளைக் காட்டி சூடாக்கி குளிரினைப் போக்க முயற்சித்தார்கள்.

**4. வாடையால் விலங்கினங்கள் எவ்வாறு வருந்தின?**

- வாடையால், விலங்குகள் ஆநிரைகள் மேய்ச்சலை மறந்தன.
- குரங்குகள் நடுங்கின. பறவைகள் தாம் தங்கி இருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன.
- பசுக்கள் பால் உண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**5. கூதிர்ப்பருவம் என்பது யாது?**

- ❖ பழந்தமிழர், ஓர் ஆண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்தினர்.
- ❖ ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப்பருவம் என அழைத்தனர்.

**6. நெடுநல்வாடை -- பிரித்து பொருள் தருக .**

- ❖ நெடுநல்வாடை= நெடுமை + நன்மை + வாடை
- ❖ அதாவது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுதியால், நெடு வாடையாக (நீண்ட வாடை) இருந்தது.
- ❖ போர்ப்பாசறையில் தங்கிய தலைவன் வெற்றி பெற ஏதுவானதால், "நல்வாடை". எனவே, "நெடுநல்வாடை" என ஆயிற்று.

## சிறுவினாக்கள்

**1. நெடுநல்வாடை நூல் குறிப்பு தருக .**

- ❖ சங்க இலக்கியம் சார்ந்த பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று .
- ❖ பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.
- ❖ இயற்றியவர் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர்.
- ❖ 188 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாக நக்கீரர் இயற்றியுள்ளார்.

**2. வாகைத் திணை விளக்குக.**

**இலக்கணம்:**

- ❖ வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.

**சான்று:**

**"வையகம் பணிப்ப வலனேர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன....."**

**விளக்கம்:**

- ❖ வாடைக் காலத்தில் மேகம் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழை பெய்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு மன்னனும் பாசறையில் குளிர்காலத்தில் வெற்றியைக் கொண்டாடினான்.
- ❖ இவ்வாறு வெற்றியைப் பற்றிக் கூறியுள்ளதால் இப்பாடல் வாகைத் திணையாகும்.

**3. "கூதிர்ப்பாசறை" துறையைச் சான்றுடன் விளக்குக.**

**இலக்கணம்:**

- ❖ கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்கொண்ட அரசன் குளிர்காலத்தில் தாங்கும் படை வீடாகும்.

  **சான்று :**

  **"வையகம் பணித்த வலனேர்பு வளைஇப்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன"**

**விளக்கம்:**

❖ வாடைக் காலத்தில் மேகம் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழை பெய்தது. வாடைக் காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு போர்மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்ப் பாசறை ஆகும்.

**4. கூதிர் காலத்தின் தன்மையான நெடுநல்வாடை குறிப்பிடுபவை யாவை?**

❖ விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.

❖ குரங்குகளின் உடல் குளிரால் கூனிப் போயின.

❖ பூனை, பறவைகள் குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.

❖ பால் குடிக்க வரும் கன்றுகளை பசுக்கள் உதைத்துத் தள்ளின.

❖ குன்றே குளிர்ந்தது போல கூதிர்காலத்தின் தன்மை இருந்தது.

## விரிவானம்

**இயற்கை ௨**

## முதல்கல்

**– உத்தமசோழன்**

48ZB95

### நுழையும் முன்

❖ பயிர்களை வாழவைப்பது மழை, அது பெருமழையாகி வெள்ளமாய்த் திரண்டு தேங்குகையில்,தான் உயிர்ப்பித்த பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது. அது மழையின் குற்றமல்ல. வெள்ளம் தேங்காமல் வடிய வழிவகை செய்யாத மனிதனின் குற்றம். பெருவெள்ளத்தை வடியச் செய்யத் தனிமனிதனால் முடியுமா? ஊர் கூடிச் செய்ய வேண்டிய பணியல்லவா?

### நூல்வெளி

❖ உத்தமசோழன் (செல்வராஜ்) எழுதிய "முதல்கல்" கதை பாடமாக உள்ளது. தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இது இடம் பெற்றுள்ளது. உத்தமசோழன் திருத்துறைப்பூண்டி அருகே தீவாம்மாள்புரத்தைச் சேர்ந்தவர் மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல் பூக்கள் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார் "கிழக்கு வாசல் உதயம்" என்ற திங்களிதழைக் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.** **PTA**

**முன்னுரை:**

❖ உலக உயிர்களை வாழ வைப்பது மழை. அந்த மழையை நாம் முறையாகப் பாதுகாக்காமல் சில உயிர்களையும், பயிர்களையும் நாசமாக்குகிறோம். அதைக் கண்டு மனம் நொந்து தனி மனிதனாக இருந்து தம் ஊரைப் பொறுப்புணர்ச்சியால் மாற்றிய மருதனின் பண்பு நலன்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பண்பு நலன்கள்:**

❖ வளவனாற்றை ஒட்டிய சிற்றூர் .அவ்வூரில் வாழ்பவர்களுள் மருதனும் அவன் மனைவி அல்லி ஆவர். அவன் நிலமற்ற ஏழைத் தொழிலாளி. அவன் இல்லத்தில் வறுமை. ஆனால், உள்ளத்தில் இல்லை. எண்ணத்தால் உயர்ந்தவன்

**மருதனின் பதற்றம்:**

❖ முற்றிய நாற்றை நட்டு அதிக உரம் போட்டு, எப்படியாவது "சம்பா" அறுவடை செய்து விடலாம் என எண்ணியிருந்தனர் காவிரியின் கடைமடைக்காரர்கள். அதிக மழையின் காரணமாகப் பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்தன. வளவனாற்றின் வடகரையில் நின்று வடக்கே பார்த்த மருதனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. காரணம், பெய்த மழை போதாது என்று, வானிலை அறிக்கையாக வானொலி, பலத்த மழை பெய்யும் என்று அறிவித்தது.

**வழி பிறந்தது விழி மலர்ந்தது:**

❖ மறுபடியும் பெருமழையா என ஆயிரம் சிந்தனைகளோடு கரைவழியே நடந்தான் மருதன். உபரித் தண்ணீர் வடிய வேண்டிய வடிகால் மதகை எட்டிப் பார்த்தான். ஊரைச் சுற்றி வளைத்து ஓடிவரும் மூன்று மயில் நீள வடிவாய்க்கால் முழுவதும் காட்டாமணக்குச் செடிகள் வளர்ந்து, வாய்க்காலை ஆக்கிரமிப்புச் செய்திருந்தன. இந்தப் பேய்ச்செடிகளைப் பிடுங்கி எறிந்தாலே, உபரி நீர் வடியத் தொடங்கிவிடும். வயல்களில் தேங்கியுள்ள நீரும் வடிந்தோடும். கிராமமும் தப்பித்துக் கொள்ளும் எனச் சிந்தித்து, வழி கிடைத்துவிட்டது என எண்ணி, மகிழ்ச்சி அடைந்தான்.

**உதவியை நாடுதலும் உதவாத மக்களும்:**

❖ உதவிக்கு, அந்த வழியாக வந்த மாரிமுத்துவிடம் பேசினான். அவனும் ஒத்து வரவில்லை. ஊரின் மிராசு காளியப்பனிடம் கேட்டான் அவரும் சாக்கு போக்குக் கூறினார். அடுத்த அந்த ஊரின் முதல் பட்டதாரி நாகூர் பிச்சை என்ற பிரேம்குமாரிடம் கூறினார். அவரும் அரசாங்கத்திடம் சொன்னால் போதும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான். யாரும் உதவிக்கு வராததால் மனமும் உடம்பும் சோர்ந்து வீடு திரும்பியவனுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**தன் செயல்பாடும் ஊரார் செயல்பாடும்:**

❖ அதிகாலை எழுந்து சென்று, வடிவாய்க்காலில் குளிர்ந்த இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி, காட்டாமணக்குச் செடியை அறுத்து எறிந்து கொண்டிருந்தான். முருகனோடு, மனைவி அல்லியும் சேர்ந்து கொண்டாள். இருவரின் செயலைப் பார்த்த மாரிமுத்து மீன்பிடிப்பதை விட்டு விட்டு கை கொடுக்க முன்வந்தான். பின்பு வில்வண்டியில் சென்று கொண்டிருந்த காளியப்பனும் வாய்க்காலில் இறங்கினார். அடுத்தடுத்து செய்தி, ஊர் முழுவதும் பரவ ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். வாய்க்கால் முழுவதும் சுத்தமானது.

**முடிவுரை:**

❖ "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" என்பதற்கு ஏற்ப வாழும் ஊருக்கு எந்த வகையிலாவது நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணி ஆராய்ந்து செயல்பட்டு ஊரையே செயல்பட வைத்த மருதனின் பண்புநலன் பாராட்டத்தக்கதாகும்.

---

## இனிக்கும் இலக்கணம்

இயற்கை உ

## நால்வகைப் பொருத்தங்கள்

785IF4

## பாடநூல் வினாக்கள்

### இலக்கணத் தேர்ச்சிகள்

1) **தமிழில் திணைப்பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.** ஆக - 2021 மே - 2022 PTA

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு **விடை: அ) பொருட்குறிப்பு**

2. **"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே"--இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்................**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம் **விடை: இ) தொல்காப்பியம்**

3. **யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே............** ஜூலை -22

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

**விடை: ஆ) உயர்திணை,அஃறிணை**

4. **பொருத்தி விடை தேர்க.**

| | | |
|---|---|---|
| அ) அவன், அவள், அவா | - | 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | - | 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | - | 3) தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | - | 4) பதிலிடு பெயர்கள் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



அ) 4, 1, 2, 3 இ) 3, 4, 1, 2
ஆ) 2, 3, 4, 1 ஈ) 4, 3, 1, 2 **விடை: அ) 4, 1, 2, 3**

**5) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

❖ திணை, பால், எண், இடம்.

**6) உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

**உயர்திணை பன்மைப் பெயர்கள்:**

❖ நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள்.

❖ இரண்டு மனிதர்கள் போனார்கள்.

**பன்மை விகுதி பெற்று வருவன:**

❖ அவர்கள் ஆலயம் வந்தார்கள்.

❖ நான்கு வீரர்கள்போரிட்டார்கள்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. சரியானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது இ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது
ஆ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளன ஈ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம்உள்ளன
**விடை: இ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது**

**2. உலக மொழிகள் அனைத்திலும் ________ மிகுதி என்பர்.**

அ) பெயர்ச்சொற்களே இ) இடைச்சொற்களே
ஆ) வினைச்சொற்களே ஈ) உரிச்சொற்களே **விடை: அ) பெயர்ச்சொற்களே**

**3. தமிழில் ________ பகுப்பு இலக்கண அடிப்படையிலே அமைந்துள்ளது.**

அ) எண் இ) இலக்கியம்
ஆ) செய்யுள் ஈ) பால் **விடை: ஈ) பால்**

**4. இடம் ________ வகைப்படும்.**

அ) இரண்டு இ) நான்கு
ஆ) மூன்று ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

**5. ஒரு தொடரில் எழுவாய் ________ சொல்லாக இருக்கும்.**

அ) வினை இ) உரி
ஆ) இடை ஈ) பெயர் **விடை : ஈ)பெயர்**

**6. ஒரு தொடரில் பயனிலை ________ இருக்கும்.**

அ) உரிச்சொல்லாக இ) வினைமுற்றாக
ஆ) இடைச்சொல்லாக ஈ) முற்றெச்சமாக **விடை: இ) வினைமுற்றாக**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**7. உயர்திணையை அறிய உதவும் வினாச்சொல் பயனிலை________**

அ) எவன்? இ) எது?

ஆ) யார்? ஈ) எவை? **விடை: ஆ) யார்?**

**8. அஃறினையை அறிய உதவும் வினாச்சொல் பயனிலை________**

அ) எவன்? இ) எது

ஆ) யார்? ஈ) எவை? **விடை: இ) எது?**

**9. ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை________**

அ) மொழியின் எழுத்துகளும் சொற்பொருள் அமைப்பும்

ஆ) சொல்லமைப்பில்தொடர்ந்து நடைபெறும் மாற்றம்

இ) தொடரமைப்பு காலத்திற்கேற்ற இலக்கணம்

ஈ) மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும்

**விடை: ஈ) மொழி வளர்ச்சியும் இலக்கணத்தில் தேவையும்**

**10. பேசுபவர் முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது________**

அ) உளப்படுத்தாத் தன்மை பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தாத முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை

**விடை : ஆ) உளப்பாட்டுத் தன்மை பன்மை**

**11. பேசுபவர் முன்னிலையாளரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது________**

அ) உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தாத முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை

**விடை : அ) உளப்படுத்தாத தன்மைப் பன்மை**

**12. "உயர்திணை ஆண் -பெண் பால் பொதுப்பெயர்கள் தொடர்களில் அமையும்போது, வினைமுற்றால் பால் அறியப்படும்" என்பதற்குச் சான்று________**

அ) குழந்தை சிரித்தான் - குழந்தை சிரித்தது

ஆ) ஆசிரியர் வந்தார் - ஆசிரியர் வந்தனர்

இ) தங்கமணி பாடினாள் - தங்கமணி பாடினான்

ஈ) ஆசிரியர் வந்தார் - ஆசிரியர் வந்தனர்

**விடை: இ) தங்கமணி பாடினாள் - தங்கமணி பாடினான்**

## குறுவினாக்கள்

**1. மொழியின் அடிப்படைப் பண்புகள் யாவை?**

- திணை, எண், இடம், பால்.

**2. பயனிலை விகுதிகளில் எவை பால் பகுப்பைக் காட்டுகின்றன?**

- ஆன், ஆள், ஆர், அது, அன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

❖ இடம் **மூன்று** வகைப்படும்.

**அவை:**

❖ தன்மை, முன்னிலை, படர்க்கை.

**4. பதிலிடு பெயர்கள் யாவை?**

❖ அவன், அவள், அவர், அது, அவை.

**5. பால் சுட்டும் விகுதிகள் இல்லாமலும் பால் உணர்த்தும் உயர்திணைப் பெயர்ச் சொற்களைக் கூறுக.**

❖ அப்பா, தந்தை (பால் காட்டும் விகுதி இல்லாமல் ஆண் பாலை உணர்த்தின)

❖ அம்மா, தாய்,தங்கை (பால் காட்டும் விகுதி இல்லாமல் பெண்பாலை உணர்த்தின)

**6. இக்காலத் தமிழில் அஃறிணையில் வினைமுற்று எவ்வாறு வழங்குகிறது?**

❖ அஃறிணைப் பன்மைக்கெனத் தனிவினைமுற்றுகள் இல்லை. ஆனால், ஒருமை பன்மை வெளிப்படுகிறது.

**சான்று:**

❖ மரம் விழ்ந்தது; பத்து மரம் விழ்ந்தது.

**7. "பத்துத் தேங்காய்கள்" என ஏன் எழுதுவதில்லை?**

❖ அஃறிணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெறுவது கட்டாயம் இல்லை.

❖ ஆதலால், "பத்துத் தேங்காய்கள்" என எழுதாமல், "பத்துத் தேங்காய்" என, எழுதுகின்றனர்.

**8. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்பது யாது?**

❖ பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடைய சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று:**

❖ நாம் முயற்சி செய்வோம்.

**9. உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை என்பது யாது?**

❖ பேசுபவர் முன்னிலையாரையும் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப் படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று:**

❖ நாங்கள் முயற்சி செய்வோம்.

**10. தன்மைப் பன்மையின் வகைகள் யாவை?**

தன்மைப் பன்மை **இரண்டு** வகைப்படும்.

**அவை:**

❖ உளப்பாட்டுத்தன்மைப் பன்மை

❖ உளப்படுத்தாத தன்மைப்பன்மை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறுவினா

**1. முருகன் பள்ளிக்குச் சென்றான்-- இத்தொடரில் எவ்வெவற்றை அறியமுடியும்?**

- ❖ திணை, பால், எண், இடம் ஆகியவற்றை அறியமுடியும்.
- ❖ முருகன் -- எழுவாய் உயர்திணை, ஆண்பால், ஒருமை (எண்) படர்க்கை (இடம்)
- ❖ சென்றான் -- வினைமுற்று உயர்திணை, ஆண்பால், ஒருமை (எண்), படர்க்கை (இடம்).
- ❖ இதன்மூலம், எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருப்பதை நாம் அறியலாம் .

**2. இக்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படும் குழப்பம் யாது?**

- ❖ இக்காலத் தமிழில், "ஒவ்வொரு" என்னும் சொல், பேச்சிலும் எழுத்திலும் பன்மைக் குழப்பத்தோடு கையாளப்படுகிறது. சான்றாக, ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது. ஒவ்வொரு சுளைகளும் சுவையாக உள்ளது. "ஒவ்வொரு" என்பது ஒருமையைக் குறிக்கப் பெயர்முன் சேர்க்கவேண்டும். ஆகவே, "ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது" "ஒவ்வொரு சுளையும் சுவையாக உள்ளது" என்றே பேசவும் எழுதவும் வேண்டும்.

# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்

**1. 19 ஆம் நூற்றாண்டில் (1876 முதல் 1878 வரை) தென்னிந்திய பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சத்தின் பெயர் என்ன?**

தாது வருடப் பஞ்சம்.

**2. பஞ்சத்தின் பிடியில் சிக்கியவர்களைக் கண்டு மனம் பொறுக்காது மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடை அளித்த தமிழர் யார்?**

மாயூரம் வேதநாயகம்.

**3. "நீயே புருஷ மேரு ........." என்று யார் யாரைப் பாடலால் போற்றி பெருமைப்படுத்தினார்?**

கோபாலகிருஷ்ண பாரதியார் மாயூரம் வேதநாயகத்தைப் பெருமைப்படுத்தினார்.

**4. பார்த்தாள் - உறுப்பிலக்கணம் தருக.**

**பார்த்தாள் = பார் + த் + த் + ஆள்**

பார் - பகுதி

த் - சந்தி

த் - இறந்த கால இடைநிலை.

ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி.

**5. தமிழில் வெளிவந்த முதல் நாவல் எது?**

பிரதாப முதலியார் சரித்திரம்.

**6. மாயூரம் வேதநாயகம் அறிந்த மொழிகள் யாவை ?**

வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன், தமிழ், ஆங்கிலம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| In 1977, shocked at the environment devastation caused bydeforestation in her beloved Kenya, Wangari Mathai founded the GreenBelt Movement. For thirty years, themovement has enabled many women toplant trees in their regions providingthem with food, fuel and halting soilerosion and desertification. She used themovement to enlighten the people onthe fruits of representative democracy.This led Kenya to Kenya's first fullydemocratic elections in a generation.In the election, Mathai was elected tothe Parliament and made a Ministerof environment. She was conferred aNobel Prize in 2004 because of heroutstanding success in guiding Kenyanwomen to plant more than thirty milliontrees. She has transformend the livesof tens of thousands of women throughsustainable social forestry schemes. | 1977 ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி **வங்காரி மத்தாய்** பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து 30 ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாக தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமானதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல் முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளு மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்று கோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004 ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு **நோபல் பரிசு** வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |

**விடை:**

1. Environment - சுற்றுச்சூழல்
2. Devastation - பேரழிவு
3. Deforestation - காடுகள் அழிப்பு
4. beloved - உயிரினும் இனிய
5. founded - தோற்றுவித்தார்
6. thirty years - முப்பது ஆண்டுகள்
7. women - பெண்கள்
8. Plant trees - மரங்களை நடுதல்
9. food - உணவு
10. fuel - எரிபொருள்
11. soil erosion - மண் அரிப்பு
12. desertification - பாலைவனமாதல்
13. democracy - மக்களாட்சி
14. democratif election - மக்களவைத் தேர்தல்
15. generation - தலைமுறையினர்
16. Parliament - நாடாளுமன்றம்
17. Minister of environment - சுற்றுச்சூழல் அமைச்சர்
18. guiding Kenyan women - கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி
19. tens of thousands - பல்லாயிரக்கணக்கான
20. social forestry schemes - சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

**சான்று:** விலை, விளை, விழை. ஆகஸ்ட் - 2021

- ❖ கார்ப்பருவத்தில் நன்றாக **விளைந்ததால்** தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க, ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழைவதாக** அரசு அறிவித்தது.

**1. தலை, தளை, தழை.** மார்ச் - 2023 PTA

- ❖ முருகன் ஆட்டிற்குத் தேவையான இலை **தழைகளைத்** திரட்டி கயிற்றால் **தளையிட்டு** **தலையில்** சுமந்து சென்றான்.

**2. கலை, களை, கழை.**

- ❖ **கலைகளில்** சிறந்த **கழைக்கூத்தாடி**, தன் துன்பங்களை எல்லாம் **களைந்து** வேடிக்கை காட்டினார்.

**3. அலை, அளை, அழை.** PTA ஜூலை -22

- ❖ மணி தன் வீட்டின் அருகே உள்ள **அளையில்** உள்ள பாம்பைப் பிடிக்க **அலைந்து** திரிந்து ஒரு பாம்பாட்டியை **அழைத்து** வந்தான்.

---

## இலக்கிய நயம் பாராட்டுதல்

மார்ச் - 2023 ஆக - 2021 PTA ஜூலை -22

**வெட்டி யடிக்குது மின்னல் - கடல்**
**வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது:**
**கொட்டி யிடிக்குது மேகம் - கூ**
**கூவென்று விண்ணைக் குடையுது காற்று**
**சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று**
**தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்**
**எட்டுத்திசையும் இடிய - மழை**
**எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!**

**- பாரதியார்**

**திரண்ட கருத்து:**

தம்பி எல்லாத் திசைகளிலும் மின்னல் வெட்டி அடிக்கிறது. கடலோ ஆவேசத்தோடு வீரமாக தன் அலைகளைக் கொண்டு விண்ணை இடிக்கப் புறப்பட்டு விட்டது. மேகமோ தன் இடியால் கொட்டி முழங்குகிறது. காற்று "கூ" என ஓலமிட்டு விண்ணைக் குடைந்து கொண்டிருக்கிறது. வானமும் தன் பங்கிற்கு "சட சட" என்று கொட்டிக் கனைக்கிறது. எட்டு திக்குகளுமே இடிந்து போகுமாறு இந்த மழை எங்கிருந்து எப்படி வந்தது? என்று பாரதியார் கூறுகிறார்.

**மையக் கருத்து:**

பாரதியார் அவர்கள் மழைப் பொழிவை அழகாக நம் கண் முன்னே கொண்டு வந்து கூறுகிறார்.

**தொடை நயம்:**

**"தொடையற்ற பாட்டு நடையற்று போகும்"**

இப்பாடலில் மோனை, எதுகை, இயைபு போன்ற தொடை நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**மோனை நயம்:**

முதல் எழுத்துகள் ஒன்றி வருவது மோனை நயமாகும்.

**சான்று:**

எட்டுத்திசையும் -எங்ஙனம்

**எதுகை நயம்:**

**"மதுரைக்கு அழகு வைகை**

**செய்யுளுக்கு அழகு எதுகை"** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை நயமாகும்.

**சான்று:**

வெட்டி - கொட்டி

**இயைபு நயம்:**

செய்யுளில் கடைசி எழுத்தோ, ஓசையோ, சீரோ ஒன்று போல் இயைந்து வருவது இயைபு நயம் ஆகும்.

**சான்று:.**

இடிக்குது
குடையுது
கனைக்குது

**அணி நயம்:**

செய்யுளில் மழைப் பொழிவை பாரதியார் இயல்பாக நடப்பதை அழகாக எடுத்துக் கூறியுள்ளதால் இதில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

"சந்தம் பாட்டுக்குச் சொந்தம்" இப்பாடலில் இனிய ஓசைகளுடன் எதுகை, மோனை, இயைபு சிறப்பாக அமையப்பெற்று பாடியுள்ளதால் சந்தநயம் சிறப்பாக அமைந்துள்ளது.

**சுவை நயம்:**

இப்பாடலில் பாரதியார் பெருமிதச்சுவையுடன் பாடியுள்ளார்.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு:**

மழைப் பொழிவு

---

**கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக**

## பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள்: அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி

இடம்: கலைவாணர் அரங்கம் சென்னை.

**நிகழ்ச்சி நிரல்**

தமிழ்த்தாய் வாழ்த்து

**வரவேற்புரை:** திருமதி அரசி
செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை:** திரு. மு.அமுதன், இயற்கை வேளாண் உழவர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**தலைமையுரை:** திரு. இமயவரம்பன்,
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

- இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்
- பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் - தீர்வுகளும் மு. அகிலன்
- நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா
- பேரிடர் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் - திரு வின்செண்ட்

**நன்றியுரை:** பர்வீன், பசுமைப் படை மாவணர் தலைவர்

**நாட்டுப்பண்.**

**விடை:**

சென்னை கலைவாணர் அரங்கத்தில் அக்டோபர் இரண்டாம் நாள் காலை 10 மணியளவில் பேரிடர் மேலாண்மை குறித்து கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது. அவ்விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்க உள்ளது. செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் திருமதி. அரசி அவர்கள் வரவேற்புரை ஆற்ற,இந்நிகழ்வில் இயற்கை வேளாண் உழவர் திரு. அமுதன் அவர்கள் முன்னிலை வகிக்க, பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு .இமயவரம்பன் அவர்கள் தலைமை உரை ஆற்றயிருக்கிறார்.

இக்கருத்தரங்கு நிகழ்வில் இயற்கைச் சீற்றங்களும் பருவ கால மாற்றங்களும் பற்றி முனைவர் செங்குட்டுவன் அவர்களும், பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் பற்றி திரு.முகிலன் அவர்களும், நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் பற்றி திருமதி பாத்திமா அவர்களும், பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் பற்றி திரு வின்செண்ட் அவர்களும் உரையாற்ற உள்ளார்கள்.

இக்கருத்தரங்கு நிகழ்வின் இறுதியாக பசுமைப் படை மாணவர் தலைவர் செல்வன் பர்வீன் அவர்கள் நன்றியுரை கூற நாட்டுப் பண்ணுடன் நிறைவடைகிறது .

## மொழியோடு விளையாடு

### புதிர்க்கேற்ற விடையை அறிக

அ) அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் - என்ன? **(அ) விடை: ஈசல்**

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
பயிர் பச்சையாய் இருக்கிறது
பாக்கு வெற்றிலை போடாமல்
வாய் சிவப்பாய் இருக்கிறது? என்ன? **(ஆ) விடை: கிளி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## எண்ணங்களை எழுத்தாக்குக

**விடை:**



சுற்றுச்சூழல் பாதிப்பால் உலகில் அனைத்து பகுதிகளிலும் வெப்பம் அதிகரித்துள்ளது. அதனால், இயற்கையாய் இயங்கிக் கொண்டிருந்த பருவங்கள் நிலை தடுமாறுகின்றன. மழை பெய்வதற்கான இந்தக் காலம் மாறிவிட்டது. ஆறறிவு படைத்த மனிதன் தன் நலத்திற்காக பேராசையுடன் இயற்கையைச் சுரண்டுவதை நிறுத்தவில்லை. வட துருவத்தில் பனிப்பாறைகள் சிதைந்து உருகி நகர்கின்றன. தென் துருவத்தில் பனி மலைகள் இடம் பெயர்கின்றன. அவற்றின் உறுதித் தன்மை சிதைகிறது. இதையெல்லாம் நாம் கண்களால் காண முடிகிறது. பலமாக எல்லோரும் வாழ வசதியான இயற்கையைத் தந்த பூமியாகிய நான் இன்று, வெப்பப் பகுதியில் உருகிக் கொண்டிருக்கிறேன். பச்சை பட்டாடை உடுத்தி பசுமையைத் தந்த என்னை "வெம்மை" என்னும் காட்டிலே தள்ளிவிடும் மனித இனமே நான் இல்லை என்றால் நீ எப்படி பூமியாய் வாழ்வாய்? வாழ முடியும் என்று கேட்பது போல் இருக்கிறது. இன்றைய வெப்ப ரீதியால் என் உடல் சூடு ஏறுகிறது.என்னைக் குளிர்விக்க வேண்டிய நீங்களே மீண்டும் மீண்டும் மரங்களை வெட்டுகின்றீர்கள். எனக்காக அல்ல, உங்களுக்காக கேட்கிறேன். எப்போது ஒரு மரத்தை நடப்போகின்றீர்கள்? ஆனால், குளிப்பாயா என்று கனிவோடு கேட்பது போல் இருக்கிறது. இந்த உலகம் மனிதனுக்கு மட்டும் சொந்தமில்லை. நம்மை விட எண்ணிக்கை அதிகம் உள்ள எத்தனையோ உயிரினங்களுக்குச் சொந்தம். அவற்றின் பெருக்கம் நமக்குத் துணை. அவற்றை, நாம் நம்மை அறியாமலே அழிக்கிறோம். இது தவறு. நஞ்சாகி வரும் நெகிழியை முற்றிலுமாகத் தவிர்த்துவிட வேண்டும். பூமியின் சூட்டைக் குறைத்து விட வேண்டும். எல்லா வளத்தையும் இலவசமாகத் தரும் பூமியைக் காக்க, நாம் மறந்து விட்டோம். வரும் தலைமுறையினர் நிரந்தரமாக இந்தப் பூமியில் நலமாக, வளமாக வாழ நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பாடுபடுவோம்.

---

**மழை பெய்யும் போது மின் கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகினவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல்' வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலைமை ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

மு.பாலகுமரா,
மேல்நிலை இரண்டாம் ஆண்டு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருவில்லிபுத்தூர்.

பெறுநர்

தலைமை ஆசிரியர் அவர்கள்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருவில்லிபுத்தூர்.

ஐயா,

**பொருள்:** மழைக்கால பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த அனுமதி வேண்டி கோருதல் தொடர்பாக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



வணக்கம். நான் தங்கள் பள்ளியில் மேல்நிலை இரண்டாம் வகுப்பு மாணவத் தலைவன் .இனிவரும் காலம், மழைக் காலமாக இருப்பதால் இக்காலக் கட்டத்தில் அரசு, மழை நிலவரம் குறித்து விடுமுறை அளிக்கிறது. அப்பொழுது விடுமுறை என்று தெரியாமல் பள்ளிக்கு வரும் மாணவர்கள் நீர்வழிப் பாதைகளைக் கடந்து செல்லும்போது நீரில் அடித்துச் செல்லப்படுகின்றனர்.

அதனால், மழை பெய்யும் போது மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியவை அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போதிய விழிப்புணர்வை நம் பள்ளியில் நிகழ்த்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன் .ஆகவே, தாங்கள் விழிப்புணர்வு நிகழ்விற்கு ஏற்பாடுகளைச் செய்து, அனைத்து மாணவர்களும் போதிய விழிப்புணர்வைப் பெற தாங்கள் உதவிடுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

திருவில்லிபுத்தூர்
10.07.23.

இப்படிக்கு,
உங்கள்பணிவுள்ள மாணவன் ,
மு.பாலகுமரா.

## நிற்க அதற்குத் தக:

| எச்சரிக்கை நடவடிக்கைகள் | சுகாதார நடவடிக்கைகள் |
|---|---|
| • வெள்ள நீருக்க அருகே வரவோ, வெள்ளநீரில் விளையாடவோ கூடாது.<br>• ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்.<br>• சாக்கடை நீர் ஓட அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவு நீர்த்தொட்டிகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.<br>• வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன் (தடி) இருங்கள்.<br>• உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளை மீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள்.<br>• அறுந்த மின்கம்பிகள் மீது காலை வைக்காதீர்கள். மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது. | • கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள்.<br>• மூடிவைக்கப்பட்டுள்ள,சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள்.<br>• சமைத்த உணவு, சமைக்கத் தேவையில்லாத உணவுகளையே உட்கொள்ளுங்கள்.<br>• வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம்<br>• அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி உப்பு, சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம்.<br>• சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க பிளீச்சிங்பவுடர், சுண்ணாம்புத்தூளை பயன்படுத்தவும். |

❖ மேலே உள்ள குறிப்புகளை நன்கு படித்து, நான் விழிப்புணர்வோடு நடந்து கொள்வேன். பின்பு அத்துடன் இவற்றைப் பற்றி அறியாதவர்களுக்கும் தெளிவாக எடுத்துக் கூறி சரியாக வழிகாட்டி நன்கு உதவுவேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## படிப்போம்பயன்படுத்துவோம் (தொடர் வண்டி நிலையம்)

| | | | |
|---|---|---|---|
| Platform | - நடைமேடை | Ticket Inspector | - பயணச்சீட்டு ஆய்வர் |
| Train Trac | - இருப்புப்பாதை | Level Crossin | - இருப்புப்பாதையைக் கடக்குமிடம் |
| Railway Signal | - தொடர்வண்டி வழிக்குறி | Metro Train | - மாநகரத் தொடர்வண்டி அ.மா.தே. 23 |

www.Padasalai.Net




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் 3 சுற்றத்தார் கண்ணே உள

பண்பாடு



பழங்குடியினரின் சமூக வாழ்க்கை ஓவியம், நீலகிரி.

**கற்றல் நோக்கங்கள்:**

- ❖ தமிழர் குடும்ப உறவுமுறைகளை அறிந்து, அவற்றைப் போற்றும் பண்பினைப் பெறுதல்.
- ❖ வாழ்வின் இன்ப துன்பங்களைப் பாடாமாக ஏற்கும் பக்குவங்களைக் கவிதையாகப் படைக்கும் திறன் பெறுதல்.
- ❖ தமிழர்க்கே உரிய பண்பாட்டுக்கூறுகளைக் காப்பியம்வழியாகப் படித்துணர்ந்து பின்பற்றுதல்.
- ❖ நிலத்தோடு ஒன்றிய எளிய மக்களின் உணர்வுகளைக் கதைகளில் படித்துக் கருத்துரைத்தல்.
- ❖ சூழலுக்கேற்பச் சொல்லையும் பொருளையும் தொடரையும் பொருத்தமாகப் பயன்படுத்தும் திறன் அடைதல்.

**பாடப்பகுதிகள்**

- ❖ தமிழர் குடும்ப முறை - **பக்தவத்சல பாரதி**
- ❖ விருந்தினர் இல்லம் - **ஜலாலுத்தீன் ரூமி**
- ❖ கம்பராமாயணம் - **கம்பர்**
- ❖ உரிமைத்தாகம் - **பூமணி**
- ❖ பொருள்மயக்கம்
- ❖ திருக்குறள் - **திருவள்ளுவர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



உரைநடை உலகம்

பண்பாடு ௩

# தமிழர் குடும்ப முறை

– பக்தவத்சல பாரதி

ALTKME

## நுழையும் முன்

❖ குடும்பம் என்ற அமைப்பு ஏற்படப் பன்னெடுங்காலம் ஆகியிருக்கலாம். இந்த உயரமைப்பின் மூலமே உலகச் சமூகம் இயங்குகிறது. சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது. அதன் தொடர்ச்சி இன்றுவரை இருக்கிறது. தொன்மைக் காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கியிருந்த தமிழ்ப் பண்பாட்டின் செழுமை, சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது.

## தெரிந்து கொள்வோம்

| தமிழர் பரம்பரை | |
|---|---|
| பரன் | பரை |
| சேயோன் | சேயோள் |
| ஓட்டன் | ஓட்டி |
| பூட்டன் | பூட்டி |
| பாட்டன் | பாட்டி |
| தந்தை | தாய் |
| நாம் | |
| மகன் | மகள் |
| பெயரன் | பெயர்த்தி |
| கொள்ளுப் பெயரன் | கொள்ளுப் பெயர்த்தி |
| எள்ளுப் பெயரன் | எள்ளுப் பெயர்த்தி |

## நூல்வெளி

❖ இப்பாடப்பகுதி, பனுவல் (தொகுதி II, 2010) காலாண்டிதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம். இதை எழுதியவர் **பக்தவத்சல பாரதி.** தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை இவர் முன்னெடுத்து வருகிறார். பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை,** ஆகஸ்ட் - 2021

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

**விடை: ஆ) திருமணமும் குடும்பமும்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



2. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே -ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.............. மார்ச் - 2023 ஜூலை -22

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூக முறை

**விடை: ஈ) தந்தை வழிச் சமூக முறை**

## குறுவினா

1. **புக்கில், தன்மனை- சிறுகுறிப்பு எழுதுக.** PTA அ.மா.தே. 23 மார்ச் - 2020 ஜூலை -22

**புக்கில்:**

❖ "புக்கில்" என்பது தற்காலிகமாகத் தங்கும் இடம் அல்லது தற்காலிகப் புகழிடத்தைக் குறிப்பதாகும்.

**தன்மனை:**

❖ திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இடம், பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் "தன்மனை" என அழைக்கப்பட்டது.

2. **சங்க காலத்தில் தாய்வழிச் சமூகத்துறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?** ஆகஸ்ட் - 2021

❖ சங்க காலத்தில் கண சமூகத்துக்குப் பெண்களே தலைமை ஏற்றிருந்தார்கள்.

❖ தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருந்தனர்.

❖ அதனால், குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

## சிறுவினாக்கள்

1. **பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம்- விளக்கம் தருக.** ஜூலை -22 PTA ஆகஸ்ட் - 2021 மே - 2022

❖ சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று, இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் "விரிந்த குடும்ப" முறையும் காண முடிகிறது.

❖ கணவன் மனைவி மகனோடு சேர்ந்து வாழும் நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியார் புறநானூற்றில் கூறியுள்ளார்.

❖ நற்றாய் ஒருபுறம் இருந்தாலும் செவிலியும் அவளது மகளாகிய தோழியும் குடும்பத்தில் முதன்மை பெற்றனர். இம்முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சி பண்டைய காலத்தில் காண முடிகிறது.

❖ கணவனின் சகோதர சகோதரிகள், தாய் தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பமாக விளங்குகிறது.

2. **தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

❖ பெற்றோருக்காக என்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- குடும்ப வேலைகளைப் பகிர்ந்து செய்கிறேன்.
- காலையில் நான்கு மணிக்கு எழுந்து படிக்க வேண்டியதைப் படித்து முடித்துவிடுவேன்.
- தாய், தந்தை பணிக்கு ஆயத்தம் ஆவதற்குள் மூன்று பேருக்கும் உணவு எடுத்து வைப்பேன்.
- பெற்றோர் வந்தவுடன் மறுநாளுக்குத் தேவையான பொருள்களை கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.
- விடுமுறை நாள்களில் என் ஆடைகளை நானே துவைத்துக் கொள்கிறேன்.

## நெடுவினா

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது- எவ்வாறு? விளக்கு.** ஆகஸ்ட் - 2021 மே - 2022

**முன்னுரை:**

- மனித சமூக கட்டமைப்பிற்கு அடிப்படை அலகாக அமைவது குடும்பமே. பல குடும்பங்கள் சேர்ந்து ஊர் உருவாகிறது. பல ஊர்கள் இணைந்து, விரிந்து காணப்படுவது சமூகமாகும்.

**இன்பத்தமிழ்:**

- நாணயத்தின் இருபக்கம் போல குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது. குடும்பம் என்ற சொல் தொல்காப்பியத்திலோ சங்க இலக்கியத்திலோ இடம்பெறவில்லை. குடும்பம் என்ற சொல் திருக்குறளில் மட்டும் பயின்று வருகின்றது.

**தாய்வழிக் குடும்பம்:**

- திருமணம் ஆன கணவன் மனைவி, மனைவியின் வீட்டில் சேர்ந்து வாழ்தல். தாயே தலைமை ஏற்பாள். சங்க இலக்கியத்தில் தாய்வழி சமூகம் நிலவியது.

**தந்தைவழிக் குடும்பம்:**

- திருமணமான கணவன் மனைவி கணவனின் தந்தை வீட்டில் வாழ வேண்டும். "மனையுறை மகளிர்க்கு ஆடவர்" - குறுந்தொகை கூறுகிறது.

**தனிக் குடும்பம்:**

- இன்றைய தொழிற் சமூகத்தில் பெரும்பான்மையாக நிலவுவது, தனிக்குடும்பம் ஆதி குடிகளிடம் காணப்பட்டது. இவ்வகை அமைப்பு சமூகக் கட்டமைப்பில் இறுதியில் ஏற்பட்டதாகும்.

**விரிந்த குடும்பம்:**

- கணவன், மனைவி, குழந்தைகள் சேர்ந்து வாழும் கூட்டுக்குடும்பம் விரிந்த குடும்பமாகும்.

**சமூகக் கட்டமைப்பில் குடும்பம்:**

- "குடும்பம்" எனும் சொல் "கூடிவாழ்தல்" என்று பொருள்படுகிறது. பண்டையத் தமிழர்கள் புக்கில், தன்மனை என்ற அமைப்பில் வாழ்ந்தனர். புக்கில் என்பது தற்காலிகத் தங்குமிடம் ஆகும்.தன்மனை என்பது திருமணம் ஆனவர்கள் பெற்றோரை விட்டு தனித்து வாழும் இடம் ஆகும். மணந்தகம் என்பது மணம் புரிந்த கணவன் மனைவியும் சேர்ந்து வாழத் தொடங்கி முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலக்கட்டத்தைக் குறிப்பது ஆகும். குடும்பம் தனி மனிதனுக்காகவும் சமுதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**முடிவுரை:**

❖ குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது என்பதை நாம் இதன் மூலம் அறியலாம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மனித சமூகத்தின் அடிப்படை அலகு ________**

அ) கணவன் இ) திருமணம்

ஆ) மனைவி ஈ) குடும்பம் **விடை: ஈ) குடும்பம்**

**2. "குடும்பம்" என்னும் சொல் முதன் முதலில் இடம் பெற்ற நூல் ________**

அ)தொல்காப்பியம் இ) சிலப்பதிகாரம்

ஆ) நன்னூல் ஈ) திருக்குறள் **விடை: ஈ) திருக்குறள்**

**3. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போன்று ________**

அ) கணவன், மனைவி இ) திருமணம், குடும்பம்

ஆ) தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் ஈ) தாய்வழிக்குடும்பம், தந்தை வழிக்குடும்பம்.

**விடை: இ) திருமணம்,குடும்பம்**

**4. "நுண்மனை" என்பதன் பொருள் ________**

அ) கணவனின் இல்லம் இ) நற்றாய் இல்லம்

ஆ) மனைவியின் இல்லம் ஈ) செவிலியின் இல்லம் **விடை: அ) கணவனின் இல்லம்**

**5. சங்கப் பாடல்களில், "மனை" "எனும்" சொல் குறிப்பது ________**

அ) வாழிடம் இ) கோட்டை

ஆ) காவற்காடு ஈ) சமவெளி **விடை: அ) வாழிடம்**

**6. தாய்வழிக் குடும்பங்களில் குலத்தொடர்ச்சிக்கு உரியவர் ________**

அ) பெண்கள் இ) பெண்கள், ஆண்கள்

ஆ) ஆண்கள் ஈ) குழந்தைகள் **விடை: அ) பெண்கள்**

**7. மணந்தகம் என்பது ________**

அ) திருமணக்கூடம் இ) கோவில்

ஆ) வீடு ஈ) இல்லறத் தொடக்கம் **விடை: ஈ) இல்லறத் தொடக்கம்**

**8. மணமக்களின் வாழ்விடம் என்பது ________**

அ) கணவனின் அகம் இ) தனியார் விடுதி

ஆ) மனைவியின் அகம் ஈ) இவற்றில் எதுவும் இல்லை **விடை: அ) கணவனின் அகம்**

**9. "சிலம்புகழி நோன்பு" செய்வதற்கு உரியவர்________**

அ) நற்றாய் இ) தலைவனின் தாய்

ஆ) செவிலித்தாய் ஈ) தலைவியின் தாய் **விடை: இ) தலைவனின் தாய்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**10. தாய்,தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் ________**

அ) புரிதல் இல்லாத குடும்பம் இ) நெருக்கமான குடும்பம்
ஆ) நெருக்கம் இல்லாத குடும்பம் ஈ) முடிவுநிலை குடும்பம் **விடை: இ) நெருக்கமான குடும்பம்**

**11. "இலக்கிய மானிடவியல்" என்னும் நூலை இயற்றியவர்________**

அ) சுப்பிரமணிய பாரதியார் இ) பாரதி பாஸ்கர்
ஆ) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது.

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

**5. கல்விப் பயிற்சி என்பது**

அ) வித்தியாரம்பம் ஆ) வித்தியாப் பியாசம்

இ) அக்ஷரப்பியாசம் ஈ) பெருக்கல் வாய்பாடு

**6. ச.த சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்.**

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

**7. சரியான இலக்கணக் குறிப்பைத் தருக.**

ஆடலும் பாடலும்

அ) அடுக்குத் தொடர் ஆ) எண்ணும்மை

இ) இரட்டைக் கிளவி ஈ) உம்மைத் தொகை

**8. அருங்கானம் - இதில் பயின்றுவரும் புணர்ச்சி விதிகள்**

அ) ஈறுபோதல், இனமிகல்

ஆ) ஈறுபோதல், முன்னின்றமெய் திரிதல்

இ) இனமிகல், ஈறுபோதல்

ஈ) ஈறுபோதல், ஆதிநிடல்

**9. வியந்து - பகுபத பிரிப்பு முறை தேர்க.**

அ) விய + த் + த் + உ ஆ) விய + த்(ந்) + த் + உ

இ) விய + ந் + த் + உ ஈ) விய + த் + உ

**10. சரியான எழுத்து வழக்கைத் தேர்க.**

அ) புள்ளைக்கு ஒடம்பு சரியில்லை.

ஆ) புள்ளைக்கு உடம்பு செரியில்லை.

இ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை.

ஈ) பிள்ளைக்கு உடம்பு சரியில்லை.

**11. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க.**

அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறின; காகங்கள் கூவின

ஆ) வாழைத் தோப்பில் குயில்கள் குழறின; காகங்கள் அலறின.

இ) வாழைத் தோட்டத்தில் குயில்கள் கூவின; காகங்கள் கரைந்தன.

ஈ) வாழைத் தோப்பில் குயில்கள் கூவின; காகங்கள் கரைந்தன.

**12. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.**

**குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.**

அ) எந்தச் சொல் திருக்குறளில் இடம் பெற்றுள்ளது?

ஆ) முதன் முதலில் திருக்குறளில் இடம் பெற்றது எது?

இ) எது திருக்குறளில் இடம் பெற்றுள்ளது?

ஈ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

**13. பாரதியார், எங்கிருந்து பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்?**

அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம்

இ) கடையம் ஈ) சென்னை

**14. மயங்கொலிப் பிழை நீக்கப்பட்ட தொடரைத் தேர்க.**

அ) அப்பசி மாதம் அடைமலையில் ஊருணி நிரைந்தது.

ஆ) ஐப்பசி மாதம் அடைமளையில் ஊறணி நிறைந்தது.

இ) ஐப்பசி மாதம் அடைமழையில் ஊருணி நிறைந்தது.

ஈ) ஐப்பசி மாதம் அடைமழையில் ஊரணி நிரைந்தது.

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும் 12x2=24**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

15. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?
16. பூவில் தங்குவது எது? புலவர் பாடலில் தங்குவது எது?
17. கலிவிழா, ஒலிவிழா - விளக்குக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம் யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. இல்வாழ்வின் பயன் யாது?
20. திருவள்ளுவர் நேர மேலாண்மை குறித்துக் கூறுவது யாது?
21. பசுமைக் குடில் வாயுக்கள் எவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ. விளங்கி ஆ. உயர்ந்தோர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ. எத்திசை ஆ. உரனுடை
24. பொருளுணர்த்துமாறு மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விளை - விலை
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ. நம் வாழ்கையின் தரம் நமதுக் கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.
ஆ. படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனத்துடன் இருந்தால் அறிவை பெறலாம்.
26. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
அ. குதிரை, வேகம், ஓடு, தாவு
ஆ. திரை, காண், கைதட்டல், மக்கள்
27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ. வழிவழியாக
ஆ. ஆணி அடித்தாற் போல
28. எவ்வகை வாக்கியம் என்பதைக் கண்டறிக.
அ. ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?
ஆ. நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.
29. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
அ. பூத்த மலரொன்று பறக்கிறது.
ஆ. வானம் அழுகிறது பூமி சிரிக்கிறது.
30. கீழ்க்காணும் தொடர்களில் பயின்று வரும் சுவைகள் யாது?
அ. தென்னிந்தியாவிலேயே முதல் தொடர்வண்டி நிலையம் அமைந்த இடம் இராயபுரமே.
ஆ. என்னே! யோகாசனத்தின் சிறப்புகள்!

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7x4=28**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. "வாயிலோயே..... எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்தை எழுதுக.
33. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதை வழி நிறுவுக.
34. இறைமகனின் எளிய நிலையாக எச்.ஏ. கிருட்டிணனார் கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. 'கலைமுழுமை' - என்பதை விளக்குக.
36. ஒரு நகரம் உலகப் புகழ் பெறுவதற்கு வேண்டிய சிறப்புகள் யாவை?
37. திரைப்படத்தில் காட்சிகள் எவ்வாறெல்லாம் காண்பிக்கப்படுகின்றன - விளக்குக.
38. நேர மேலாண்மை குறித்து விளக்கி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் - 42 க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.**

39. வாகைத் திணை (அல்லது) கூதிர்ப் பாசறை என்னும் துறையைச் சான்றுடன் விளக்குக.
40. கீழ்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக.

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்
- நாமக்கல் கவிஞர்.

41. கவிதை புனைக ஏதேனும் ஒன்றனுக்கு 'மழை' அல்லது 'மரங்கள்'.
42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக. (அல்லது)
எறும்பு ஊரக் கல்லும் தேயும்
43. அ. தமிழாக்கம் தருக
1) Learning is a treasure that will follow its owner every were.
2) A New language is a new life
3) Knowledge of language is the doorway to wisdom.
4) The limits of my language are the limits of my world.

ஆ. செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:

மா. இராசமாணிக்கனாரின் தந்தை அரசுப் பணியாளர் அதனால், அவர் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. ஆந்திர மாநில



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் நான்காம் வகுப்புவரை தெலுங்கு மொழியையே பயின்றார். இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் ஒரு தையல் கடையில் வேலைக்கச் சேர்க்கப்பட்டார். இரவில் வீடு திரும்பும்போது அந்தக் கடைக்காரர் சம்பளமாகக் காலணா கொடுப்பார். தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளியின் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாம் வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அனைவராலும் பாராட்டப் பெற்றார். பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என வளர்ந்தார். இலக்கியம், வரலாறு, சமயம், கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்தார்.

**வினாக்கள்:**

1. மா. இராசமாணிக்கனார் தொடக்கக் கல்வியை எங்கு பயின்றார்?
2. நான்காம் வகுப்புவரை அவர் பயின்ற மொழி யாது?
3. தையல்கடை உரிமையாளர் நாளொன்றுக்கு அவருக்கு அளித்த சம்பளம் எவ்வளவு?
4. ஆறாம் வகுப்பு முதல் ஆறு ஆண்டுகள் யாருடைய உதவியால் கல்வி பயின்றார்?

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி. 3x6=18**

44. அ. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ. கடையெழு வள்ளல்களையும் அவர்தம் சிறப்புகளையும் சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

45. அ. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக்கோரி உங்கள் பகுதியின் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' -இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ. 'தலைக்குளம்' என்னும் சிறுகதை மூலமாகக் கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருவதை விளக்குக.

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. "வையகம் பனிப்ப" ..... எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 1x4=4

ஆ. "அறிவு" என முடியும் குறளை எழுதுக. 1x2=2

# பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் - IV (2019 - 2020)

**மதிப்பெண்கள்: 90**

## பகுதி - I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

**ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 14x1=14**

1. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்**
   அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி
   இ) சூரியநிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி
2. **பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று**
   அ) புறநானூறு ஆ) அகநானூறு
   இ) நெல்நல்வாடை ஈ) நற்றிணை
3. **ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்....**
   **இத்தொடர்களில் வெளிப்படும் செய்திகள்**
   1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி
இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

4. **வேறுபட்டதைக் குறிப்பிடுக.**
அ) அண்மைக் காட்சித் துணிப்பு
ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சி துணிப்பு
ஈ) காட்சி மறைவு

5. **இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை என்பது**
அ) முகலாயக் கட்டடக் கலை
ஆ) பிரித்தானியக் கட்டடக் கலை
இ) இந்தியப் பாரம்பரியக் கட்டடக் கலை
ஈ) இவை மூன்றும் கலந்தது

6. **தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்ட நாள்**
அ) 2005, டிசம்பர் 26 ஆ) 2005, டிசம்பர் 24
இ) 2005, டிசம்பர் 23 ஈ) 2004, டிசம்பர் 23

7. **தமிழில் திணைப்பாகுபாடு _______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

8. **பொருத்தி விடை தேர்க.**
அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா
அ) 1 2 3 4 ஆ) 4 3 1 2 இ) 2 3 1 4 ஈ) 3 4 2 1

9. **'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை**
அ) முதல் கல் ஆ) தலைக்குளம்
இ) உரிமைத்தாகம் ஈ) கோடைமழை

10. **வயங்குமொழி - என்பதன் இலக்கணக்குறிப்பு**
அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத் தொகை ஈ) உம்மைத்தொகை

11. **தந்தனன் - என்பதன் சரியான உறுப்பிலக்கணம்**
அ) தா(த) + த் (ந்) + த் + அன் + அன்
ஆ) தா(த) + ந் + த் + அன் + அன்
இ) தந்து + அன் + அன்
ஈ) தா + ந் + தன் + அன்

12. **Debit Card என்பதன் சரியான தமிழ்ச்சொல்**
அ) கடன் அட்டை ஆ) பற்று அட்டை
இ) திறன் அட்டை ஈ) குடும்ப அட்டை

13. **வானமெல்லாம் - என்னும் சொல்லின் புணர்ச்சி விதி**
அ) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல்
இ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

14. **மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?**
அ) குறியீடு ஆ) படிமம்
இ) அங்கதம் ஈ) தொன்மம்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்** 12x2=24

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

15. வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை எவை?
16. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?
17. "என்முகத்தை நான் தேடியாக வேண்டும் இப்பொழுதேனும்" இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
18. இறைமகனாரின் இன்னலைக்கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. முறை வைப்பு என்று எதனைக் கூறுவார்கள்?
20. நேர மேலாண்மையை குறிக்கும் குறளை எழுதுக.
21. மயிலை சீனி. வேங்கடசாமியின் ஆய்வுக் கட்டுரைகள் எந்தெந்த இதழ்களில் வெளிவந்தன?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்க்கொண்டு தீர்ப்பார்கள்.
23. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க
உழை - உளை - உலை
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



பேசுவார் அல்லது வெகுளி

25. கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக.
    அ. Internet banking
    ஆ. Stapler
26. உவமைத் தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக
    கிணற்றுத் தவளை போல
27. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    அ. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்ககுட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.
    ஆ. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
28. வெண்பாவின் ஈற்றுச்சீரில் வரும் வாய்பாடுகள் யாவை?
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    நிலத்தக் கௌறணும்டா அப்பத்தான் வகுறு நெறையும்
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

**பகுதி - III**

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7x4=28**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
32. சினத்தால் வரும் கோட்டினைக் கூறுக.
33. கடையெழு வள்ளல்களையும் அவர்களின் கொடைச் செயலையும் அட்டவணைப்படுத்துக.
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன?
36. எழுத்தாணிகள் - குறிப்பு எழுதுக.
37. வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு என்பதை இறையன்புவின் கூற்றுவழி நிறுவுக.
38. படத்தின் வெற்றியில் திரைக்கதையின் பங்கினை விவரிக்க.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

குறிப்பு: செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் - 42 க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39. சொற்பொருள் பின்வருநிலை அணி அல்லது தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

    பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
      பெருமை வாராதப்பா!
    சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
      செய்கை வேண்டுமப்பா!
    நன்மை செய்பவரே - உலகம்
      நாடும் மேற்குலத்தார்!
    தின்மை செய்பவரே - அண்டித்
      தீண்ட ஒண்ணாதார்!

    - கவிமணி தேசிக விநாயகம்
41. பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.
42. அ. **தமிழாக்கம் தருக**

    Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well - known for its marvellous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well - known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.

    ஆ. **செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:**

    பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

    மா. இராசமாணிக்கனார் இளம் வயதில் தந்தையை இழந்து தமையவாரால் வளர்க்கப்பட்டார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்று அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சி அடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு, எழுத்தார், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக பேராசிரியர் என வளர்ந்தார். அவர் இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்ற துறைகளிலும் மிளிர்ந்தார். ஆய்வு நெறிமுறைகளிலும் அணுகுமுறைகளிலும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



புதிய சிந்தனைகளைக் கையாண்ட இவர், சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தனர்; சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் ‘மொகஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு. வேங்கடசாமி ஆகியோராலும் உ.வே. சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் சோழர் வரலாறு பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். 2006 - 2007 ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமை - யாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**வினாக்கள்:**

1. மா.இராசமாணிக்கனார் தமிழில் முதன் முதலில் இயற்றிய நூல் எது?
2. இவர் இயற்றிய நூல்கள் யாவை?
3. இவருடைய நூல்கள் எப்போது யாரால் நாட்டுடைமையாக்கப்பட்டன?
4. இவர் மிளிர்ந்த துறைகள் யாவை?

43. ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து மரபு அல்லது புதுக்கவிதை புனைக.
கல்வி அல்லது அந்திமாலை

### பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி. 3x6=18**

44. அ. ‘வாயிலோயே’ எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் கூறும் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ. அறிவுடைமை வாழ்க்கையின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழிநின்று நிறுவுக.

45. அ. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ. திரைப்படத்துறை கலைகளின் சங்கமம் என்பதற்குச் சான்று தந்து விளக்குக.

46. அ. மாற்றம் நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும் என்பதை முதல்கல் எனும் சிறுகதை வழி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

### பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. ‘பாதகர்’ எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் 1x4=4

ஆ. ‘மகற்கு’ என முடியும் குறள் 1x2=2

## பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் - V (2019 - 2020)

**மதிப்பெண்கள்: 90**

### பகுதி - I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

**ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 14x1=14**

1. **‘குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனேம்’ இங்கு குறிப்பிடப்படுபவர்**

அ) வாலி ஆ) சுக்ரீவன்
இ) வீடணன் ஈ) குகன்

2. **பொருத்தி விடை தேர்க.**

க) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி
உ) பயன் தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது
ங) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்
ச) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 1 2 3 4 ஈ) 2 3 4 1

3. **இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்களின் எண்ணிக்கை**

அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று ஈ) ஏழு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



4. **கீழ்க்காணும் கருத்துகளுக்குத் தகுந்த விடையினைத் தேர்ந்தெடுக்க.**
**கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 மட்டும் சரி
ஆ) கருத்து 2 மட்டும் சரி
இ) இரண்டு கருத்தும் சரி
ஈ) இரண்டு கருத்தும் தவறு

5. **மேல் வாயிலக்கம் என்பதன் பொருள்**
அ) கல்விப் பயிற்சி
ஆ) பெருக்கல் வாய்பாடு
இ) பின்ன எண்களின் கீழ்த்தொகை
ஈ) பின்ன எண்களின் மேல்தொகை

6. **ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
அ) வேளாண் மேலாண்மை
ஆ) நேர மேலாண்மை
இ) நிருவாக மேலாண்மை
ஈ) வணிக மேலாண்மை

7. **உழாஅது - என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு**
அ) செய்யுளிசை அளபெடை
ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை
ஈ) உயிரளபெடை

8. **'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புது வெயில்' இக்கவிதையில் பயின்று வருவது.**
அ) பயன் படிமம் ஆ) வினைப் படிமம்
இ) மெய்ப் படிமம் ஈ) உருப் படிமம்

9. **களம், கலம் - என்பதற்குரிய சரியான பொருள்**
அ) இடம், மண் ஆ) போர், கப்பல்
இ) இடம், கப்பல் ஈ) போர், மண்

10. **Mini meals - என்பதன் சரியான தமிழ்ச் சொல்**
அ) உணவு ஆ) சிற்றுண்டி
இ) விரைவுணவு ஈ) சிற்றுணவு

11. **பொருள் முழுமை பெற்ற சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.**
அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.
ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

12. **சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது.**
அ) புயல் அபாயக் குறியீடுகள்
ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள்
ஈ) தகவல் குறியீடுகள்

13. **அறிந்து - என்பதன் இலக்கணக் குறிப்பு**
அ) பெயரெச்சம் ஆ) வினைச்சொல்
இ) வினையாலணையும் பெயர் ஈ) வினையெச்சம்

14. **ஒருமையுடன் - என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சிவிதி**
அ) ஈறுபோதல், முன்நின்ற மெய் திரிதல்.
ஆ) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
இ) இ ஈ ஐ வழியவ்வும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
ஈ) ஈறுபோதல், இனமிகல்.

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்**
12x2=24

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

15. "முன்னம் ஓர் நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" - யார், யாரைப் பற்றி கூறியது?
16. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
17. எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே என்னும் புறநானூற்று அடிகள் நினைவூட்டும் பழமொழி யாது?
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் யாரால் எப்போது அமைக்கப்பட்டது?
20. மீ அண்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?
21. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை - சிறுகுறிப்பு எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பெருங்கடல் ஆ) பூங்கோதை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



23. உரிய நிறுத்தற்குறி இட்டு எழுதுக.
இவர் சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர் சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் மொஹஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியவர்.

24. மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.
வழிவழியாக

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க
கோவில்

26. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் எவை?

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ. தொழுதனர்
ஆ. செய்த

28. கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அ. Conviction ஆ. Departure

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
விடிஞ்சதும் வீட்டுக்கு ஒரு ஆள் அரிவாள், மம்பட்டியோட வாய்க்காக்கரைக்கு வந்திடணும்

30. உரிய இடங்களில் வேற்றுமை உருபினைச் சேர்த்து எழுதுக.
முருகன் வேகம் சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7x4=28**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள்வழி விளக்குக.

32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

33. யானை புக்க பலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றை கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.

36. சென்னை நகரம் உருவாக்கம் பெற்றமையை விவரிக்க.

37. குலஷோவ் விளைவு - குறிப்பு வரைக.

38. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

39. உவமை அணி அல்லது ஏகதேச உருவக அணியைச் சான்று தந்து விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)

முச்சங்கங் கூட்டி
 முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
 அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
 சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
 அமைந்த பெருமாட்டி

- கண்ணதாசன்

41. நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு பொருத்தி எழுதுக.
யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்தல் பேசும் போக்கினைக் காணமுடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' எனவும் திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனவும் வழங்கப் பெற்றுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**வினாக்கள்:**

1. வேறுபட்ட வாழ்விடங்களைக் குறிக்கும் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.
2. தம்மனை, நும்மனை என்பன எவற்றைக் குறிக்கின்றன?
3. புக்கில் - பொருள் தருக.
4. தன்மனை என்பதன் பொருள் யாது?

### பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி.** 3x6=18

44. அ. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ. சிறுபாணாற்றுப்படை கூறும் கடையெழு வள்ளல்களுள் இருவரின் கொடை குறித்து விவரிக்க.

45. அ. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக் காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ. தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

### பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. ‘குழல் வழி’ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல். 1x4=4

ஆ. ‘மிகும்’ என முடியும் குறள். 1x2=2

## பெற்றோர் ஆசிரியர் கழக மாதிரி வினாத்தாள் - VI (2019 - 2020)

**மதிப்பெண்கள்: 90**

### பகுதி - I

**அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ஆ. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** 14x1=14

**1. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?**

அ) பாடி ஆ) சீறி
இ) கூவ ஈ) ஆடி

**2. வளைஇ - இலக்கணக் குறிப்பு**

அ) அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை
ஈ) சொல்லிசை அளபெடை

**3. சங்கச் சமூகத்தின் அடிப்படை அலகு**

அ) கணவன் ஆ) மனைவி
இ) திருமணம் ஈ) குடும்பம்

**4. சீதாள பத்திரம் என்பது**

அ) தாழை மடல் ஆ) நெல்தாள
இ) கம்பந்தட்டை ஈ) பனையோலை

**5. சிறுபாணாற்றுப்படை பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**6. தென்னிந்தியாவில் முதன்முதலில் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம்**

அ) எழும்பூர் ஆ) இராயபுரம்
இ) தாம்பரம் ஈ) வேளச்சேரி

**7. கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர்**

அ) எச்.ஏ. கிருட்டிணனார் ஆ) ஜான்பன்யன்
இ) ஜி.யு. போப் ஈ) க. கிருஷ்ணமூர்த்தி

**8. தொல்நெறி - என்பதன் இலக்கணக் குறிப்பு**

அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

**9. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



10. "ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகாமௌனம்" - இந்த அடிகளில் புலப்படுவது
அ) இரைசல்
ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்ததும்பல் இல்
ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

11. 'ஈறுபோதல்' - என்ற விதி பயின்று வரும் சொல்
அ) உரனுடை ஆ) நன்மொழி
இ) முன்னுடை ஈ) ஏழையென

12. வாழ்வை முழுமையாக்கும் கூறுகளில் முதன்மையானது
அ) ஓவியம் வரைவது ஆ) புத்தகம் வாசிப்பது
இ) உடற்பயிற்சி செய்வது ஈ) பயணம் செய்வது

13. சரியான எழுத்து வழக்கைத் தேர்ந்தெடுக்கவும்
அ) இப்ப எனக்குப் புரிஞ்சிச்சி நீயும் புரிஞ்சிக்க
ஆ) இப்போ எனக்குப் புரிஞ்சிருச்சி நீயும் புரிஞ்சிக்கோ
இ) இப்போ எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்
ஈ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்

14. உரிய நிறுத்தற்குறி அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) "நீங்கள் கொடுத்து வைத்தவர்" என்று ஆசி கூறினார்.
ஆ) "நீங்கள் கொடுத்து வைத்தவர்" என்று ஆசி கூறினார்.
இ) "நீங்கள் கொடுத்து வைத்தவர்!" என்று ஆசி கூறினார்.
ஈ) "நீங்கள் கொடுத்து வைத்தவர்!" என்று ஆசி கூறினார்.

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்** 12x2=24

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.**

15. தமிழ் மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?
16. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு வரைக.
18. குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் பற்றி எழுதுக.
20. புக்கில், நன்மனை - சிறு குறிப்பு வரைக.
21. "பருவத்தே பயிர் செய்" - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) ஈந்த ஆ) தாங்கிய
23. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக.
அ. இனநிரை ஆ) புதுப்பெயல்
24. பொருளுணர்ந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அலை, அழை
25. பிழை நீக்கி எழுதுக.
அ) கோவலன் மதுரைக்குச் சென்றது
ஆ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
26. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.
அ) நல்லன செய்யின ___________
ஆ) உண்ணாது நோற்பார் __________
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போகச் சொல்
ஆ) நிலத்தைக் கௌறனும்டா அப்பதான் வகுறு நெறையும்
28. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தொடருக்கு ஏற்ப மாற்றுக.
அ) கபிலர் திறமையானவர் என்று __________ (குமார்) தெரியும்.
ஆ. நம்முடைய ____________ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பொங்கும்.
29. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) ஆறஅமர
ஆ) வழிவழியாக
30. ஏற்ற வினா அமைக்க.
குடும்பம் என்ற சொல் முதல்முதலில் திருக்குறளில் தான் இடம் பெற்றுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 7x4=28**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்?
32. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த அருஞ்செயல்களையும் அட்டவணைப்படுத்துக.
33. "எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. குகனொடு ஐவராகி, வீடணனொடு எழுவரான நிகழ்வுகளை விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. கவிதை மறுதலைத் தொடரைச் சான்றுடன் விளக்குக.
37. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலைச் சான்றுடன் புலப்படுத்துக.
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் அறிவன யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் - 43 க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39. பொருள் வேற்றுமை அணி (அல்லது) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. கீழ்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக.

முச்சங்கம் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைந்த பெருமாட்டி

- கண்ணதாசன்

41. கவிதை புனைக.
காடு (அல்லது) நட்பு
42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்
(அல்லது)
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
43. அ. **கீழ்க்கண்ட பத்தியைப் படித்து அதிலுள்ள ஏதேனும் எட்டு ஆங்கிலச் சொற்களுக்கு தமிழாக்கத்தை எழுதுக.**

In terms of human development objectives, education is an end in itself, not just a mean to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors. for people. It increases access to income employment opportunities in life. Education people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

ஆ. **செவி மாற்றுத்திறனாளி மாற்று வினா**

இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞராகப் பணியாற்றினார். தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழறிஞர்க்கும் புத்துணர்வு ஊட்டினார். டி.கே.சி இலக்கியச் சுவைகளைப் பேசப்பேச அவையோர் தம்மை மறந்து கேட்டிருப்பார். அவரது வீட்டின் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில் உண்டு. அந்த இடத்தில் ஞாயிறு தோறும் இலக்கியக் கூட்டம் நடைபெற்றால் அவ்வமைப்பு "வட்டத் தொட்டி" என்றே பெற்றது. டி.கே.சி அவர்கள் சென்னை மாநில மேலவை உறுப்பினராகவும் அறநிலையத்துறை ஆணையராகவும் செயல்பட்டார். இலக்கிய ஆர்வம் காரணமாக இதய ஒலி, கம்பர் யார்? ஆகிய நூல்களை இயற்றினார்.

**வினாக்கள்:**

1. டி.கே.சிதம்பரநாதர் ஆற்றிய பணி யாது?
2. வட்டத் தொட்டி என்பது யாது?
3. பேசப் பேச - இலக்கணக் குறிப்பு எழுதுக.
4. டி.கே.சி இயற்றிய நூல்கள் யாவை?

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி. 3x6=18**

44. அ. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.
(அல்லது)
ஆ. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன நிறுவுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



45. அ. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. உலகப் புகழ்பெற்ற சென்னை அறிவின் நகரம், பண்பாட்டின் அடையாளம், நம்பிக்கை நகரம் என்பதை விளக்குக.

46. அ. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலன்களை விவரிக்க.

(அல்லது)

ஆ. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

### பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக**

அ. "பாதகர் குழுமி"...... எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் 1x4=4

ஆ. "மகற்கு" என முடியும் குறட்பா. 1x2=2

## அரசுப் பொதுத் தேர்வு மார்ச் - 2022

**மதிப்பெண்கள்: 90**

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14x1=14**

1. **தமிழில் திணைப் பாகுபாடு __________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**
   அ) தொடர்க் குறிப்பு ஆ) பொருட் குறிப்பு
   இ) எழுத்துக் குறிப்பு ஈ) சொற் குறிப்பு
2. **திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை __________**
   அ) 9 ஆ) 7 இ) 3 ஈ) 5
3. **"மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்" - இவ்வரிகள் இடம் பெற்ற நூல் ___________.**
   அ) புறநானூறு ஆ) கலிங்கத்துப்பரணி
   இ) தமிழ் விடு தூது ஈ) நாலடியார்
4. **உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர் _____**
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
   இ) வாணிதாசன் ஈ) சுரதா
5. **உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் _____**
   அ) உத்தம சோழன் ஆ) பூமணி
   இ) ஐராவதம் மகாதேவன் ஈ) முகமது மீரான்
6. **'நடிப்புலகின் சக்கரவர்த்தி' என்று எல்லோராலும்** அழைக்கப்படுவர் _________.
   அ) நம்பியார் ஆ) ஜெமினி கணேசன்
   இ) முத்துராமன் ஈ) சிவாஜி கணேசன்
7. **'காய்நெல்' - என்பதன் இலக்கணக் குறிப்பு ______**
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
   இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை
8. **"தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர்:**
   அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பாரதியார்
   இ) சுரதா ஈ) பாரதிதாசன்
9. **பகைவராலும் அழிக்க முடியாத அரண் _____**
   அ) அறிவு ஆ) நட்பு இ) படை ஈ) செல்வம்
10. **வேடுவர் தலைவன் ________ ஆவான்.**
    அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ)வீடணன்
11. **உபாத்தியாயர் என்ற சொல் யாரைக் குறிக்கும்?**
    அ) நடிகர் ஆ) கணக்கர்
    இ) ஆசிரியர் ஈ) மருத்துவர்
12. **'குடிமக்கள் காப்பியம்' என்று அழைக்கப்படும் நூல் _________.**
    அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்
    இ) வளையாபதி ஈ) இரட்சணிய யாத்திரிகம்
13. **'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலின் ஆசிரியர்:**
    அ) பக்தவத்சல பாரதி ஆ) வெ. இறையன்பு
    இ) தி.சு. நடராசன் ஈ) அய்யப்ப மாதவன்
14. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் _________**
    அ) முத்துவீரியம் ஆ) தொல்காப்பியம்
    இ) தண்டியலங்காரம் ஈ) வீர சோழியம்

### பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6**

15. சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?
16. எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. இறைமகனார் அடைந்த துன்பத்தைக் கண்டு மக்கள் எவ்வாறு வருந்தினர்?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4**

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?
21. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14**

22. பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க:
    காண், காணி
23. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூணு நாளா சிரமப்படுது.
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
    அ) பலகை ஆ) கோவில்
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) அறுத்து ஆ) கண்டான்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) முன்னுடை ஆ) பூம்பாவாய்
29. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
    முன் <
30. கலைச்சொல்லாக்கம் தருக.
    அ) Mobile Banking ஆ) Biography

### பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

31. ‘தன்னேர் இலாத தமிழ்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணி மாலை பாடல் வழி விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2x4=8**

35. “படாஅம் ஈந்த கெடாஅ நல்லிசை” - இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.
36. ‘இன்றை கூட்டுக் குடும்பம், பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே’ - விளக்குக.
37. பண்டைக்கால பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகள் யாவை?
38. உழவுத்தொழிலில் மேலாண்மை குறித்து நீவிர் அறிந்தனவற்றை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12**

39. அ) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

    அல்லது

    ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
    பண்பும் பயனும் அது.
    - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. **இலக்கிய நயம் பாராட்டுக.**
    (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

    பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
    பெருமை வாராதப்பா!
    சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
    செய்கை வேண்டுமப்பா!
    நன்மை செய்பவரே - உலகம்
    நாடும் மேற்குலத்தார்!
    தின்மை செய்பவரே - அண்டித்
    தீண்ட ஒண்ணாதார்!

    - கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
    அ) யானைக்கும் அடி சறுக்கும்

    அல்லது

    ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்
42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

    அல்லது

    ஆ) செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



43. **தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. Knowledge of language is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

**43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.**

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று விளக்குக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை விளக்குக.

## பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

அ. "இதில் வெற்றி பெற" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள 'விண் வேறு' எனத் தொடங்கும் மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ. 'அரிது' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

## அரசுப் பொதுத் தேர்வு ஜூலை - 2022

**மதிப்பெண்கள்: 90**

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14x1=14

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்:**
   அ) யாப்பருங்கலக்காரிகை
   ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம்
   ஈ) நன்னூல்

2. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!"**
   **-இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**
   அ) அடிமோனை, அடிஎதுகை
   ஆ) சீர்மோனை, சீர்எதுகை
   இ) அடி எதுகை, சீர்மோனை
   ஈ) சீர்எதுகை, அடிமோனை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

**ஆர்டர்கள் தொடர்புக்கு**

**8925612359 - 8643007972**
**7010414574 - 8248737898**

# பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898
penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

**விலை: 89**


Kindly send me your study materials to padasalai.net@gmail.com